களில் அறிவுப் பூர்வமான இயக்கம் ஒன்று தோன்றியது. பழைய கருத்துக்களும் கோட்பாடுகளும் மறைந்தன. நிரூபிக்க முடியாத கோட்பாடுகள் மறுக்கப்பட்டன. ஜான்லாக், ரூசோ, மாண்டெஸ்கியு, ஆடம்ஸ்மித் ஆகியோரின் கருத்துக்களும் கோட்பாடுகளும் அன்றைய சமுதாயத்தில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தின. புரட்சிகரமான இவர்களது கருத்துக்கள் குடியேற்ற நாடுகளில் வேகமாகப் பரவின. அமெரிக்க சிந்தனையாளர்கள் இந்த புதிய கருத்துகளின் தன்மைகளை அவற்றின் உண்மையான நோக்கில் புரிந்து கொண்டு, அவைகளின் அடிப்படையில் மேலும் பல புதிய கருத்துக்களைத் தோற்றுவித்தனர்.

# 5. அமெரிக்க சுதந்திரப் போர்

## (American War of Independence, 1775-83)

உலக வரலாற்றில் நடைபெற்ற மாபெரும் நிகழ்ச்சிகளில் அமெரிக்க சுதந்திரப்போரும் ஒன்றாகும். வட அமெரிக்காவில் அமைக்கப்பட்ட பதின்மூன்று குடியேற்ற நாடுகள் ஒன்று சேர்ந்து தங்கள் தாய்நாடான இங்கிலாந்துக்கு எதிராக நடத்திய போர் ஆகும். மேலும் இந்தப்போர் உலக வரலாற்றில் குடியேற்ற நாட்டு ஆதிக்கத்தை எதிர்த்து நடத்தப்பட்ட முதல் சுதந்திரப் போர் ஆகும். இங்கிலாந்தின் மூன்றாம் ஜார்ஜ் மன்னர் காலத்தில் இந்த போர் நடைபெற்றது. இப்போரின் இறுதியில் குடியேற்ற நாடுகள் வெற்றியடைந்து, 'அமெரிக்க ஐக்கியநாடுகள்' என்ற புதிய சுதந்திர நாடு தோன்றியது. இங்கிலாந்து பின்பற்றிய பழைய குடியேற்றக் கொள்கைகளுக்கு சாவு மணி அடித்தது. மனிதஇனத்தின் பறிக்கப்பட முடியாத அடிப்படை உரிமைகளை தொகுத்துக் காட்டியது. ஜனநாயகத்தின் தனிப்பெரும் பிரநிதி ஆகவும் அடிப்படை உரிமைகளின் இருப்பிடமாகவும் அமெரிக்கா விளங்குவதற்குக் காரணமானது. உலகம்முழுவதிலும் நடைபெற்ற புரட்சி இயக்கங்களுக்கும், உரிமைப் போர்களுக்கும் முன்னோடியாகத் திகழ்ந்தது அமெரிக்க சுதந்திரப் போர் ஆகும்.

### அமெரிக்க சுதந்திரப் போருக்கான காரணங்கள்

### 1) இங்கிலாந்து பின்பற்றிய பழைய குடியேற்றக் கொள்கை Old Colonical Policy of England

அமெரிக்கக் குடியேற்றங்களுடன் இங்கிலாந்து பின்பற்றிய பழைய குடியேற்றக் கொள்கை அமெரிக்க சுதந்திரப் போருக்கு

முக்கிய காரணமானது. இக்கொள்கையின்படி 'குடி யேற்ற நாடுகள் தாய்நாடுகளின் நன்மைக்காகத்தான் இருக்கின்றன' என்று கருதப்பட்டது. இதன்படி இங்கிலாந்துக்கு சாதகமாகவே குடியேற்ற வியாபாரம் இருக்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது. புகையிலை, பருத்தி போன்ற பொருட்களை இங்கிலாந்தைத் தவிர வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய குடியேற்ற நாடுகளுக்கு உரிமை இல்லை. தாங்களே தங்களுக்கு தேவைப்படும் பொருட்களை உற்பத்தி செய்யக் கூடாது. இங்கிலாந்திலிருந்தே இறக்குமதி செய்து கொள்ள வேண்டும். இங்கிலாந்து குடியேற்ற நாட்டு வாணிபத்தில் தனது நாட்டு வணிகர்களுக்கே முதலிடம் கொடுத்தது. இவ்வாறு குடியேற்ற நாடுகளின் வாணிபத்தை தனக்குச் சாதகமான முறையில் கட்டுப்படுத்தி அதிக லாபம் சம்பாதித்து அவைகளை தங்கள் நாட்டின் வியாபாரத் தலங்களாகவும், வாணிப சந்தைகளாகவும் கருதி வந்தது இங்கிலாந்து. இதனை குடியேற்ற மக்கள் வெறுத்தனர்.

## 2) தொழில் வாணிபக் கட்டுப்பாட்டு சட்டங்கள்

இங்கிலாந்து குடியேற்ற நாடுகளுடன் கொண்டிருந்த வணிகக் கொள்கையே சுதந்திரப் போருக்கு அடிப்படைக் காரணமானது. குடியேற்ற நாடுகளுக்கான சட்டங்களை இயற்ற தனக்கு உரிமை உண்டு என்று கூறிய இங்கிலாந்து பாராளுமன்றம் 1651-முதல் பல சட்டங்களை இயற்றி குடியேற்ற நாடுகளின் உற்பத்தித் தொழில்கள் மீது பல கட்டுப்பாடுகளை விதித்து அவைகளை வளர விடாமல் தடுத்தது.

### a) நாவாய் சட்டம் : Navigation Act, 1651

இந்த சட்டத்தின்படி இங்கிலாந்திற்கு வரும் பொருட்கள் இங்கிலாந்துக் கப்பல்களில் அல்லது அப்பொருட்கள் உற்பத்தி செய்தநாட்டின்கப்பல்களில்மட்டுமேவரலாம்என்று கட்டுப் பாடுகள் விதிக்கப்பட்டது.

### b) சரக்குப் பட்டியல் சட்டம் : Enumerated Commodities Act, 1660

இச்சட்டத்தின்படி சர்க்கரை, புகையிலை, பருத்தி, அவுரிச் சாயம், வெல்லப்பாகு, தாதுக்கனிமங்கள், நெல் போன்ற பொருட்களை வட அமெரிக்கக் குடியேற்ற மக்கள் இங்கிலாந்துக்கும் அதன் பிற குடியேற்றங்களுக்கு மட்டுமே விற்க வேண்டும்.

### c) முக்கியப் பொருட்கள் சட்டம் : Staple Act, 1663

இந்தச் சட்டத்தின்படி ஐரோப்பாவிலிருந்து வட அமெரிக்கக்குடியேற்றங்களுக்கு கொண்டு செல்லப்படும் பொருட்கள் முதலில் இங்கிலாந்துக்கு வந்து சுங்கவரி செலுத்திய பின்பே

அமெரிக்கா செல்ல வேண்டும் என்று விதித்தது. மேலும் அமெரிக்காவின் சுங்கவரி வசூலிக்கும் அதிகாரிகளை நியமிக்கும் சுங்கச் சட்டத்தை, 1673 ல் இங்கிலாந்து பாராளுமன்றம் இயற்றியது.

### d) செயற்படுத்தும் சட்டம் : Enforcement Act, 1696

நாவாய்ச் சட்டங்கள், சுங்கச் சட்டங்கள் அனைத்துமே தங்கள் பொருளாதார வளர்ச்சியைப் பாதிப்பவையாக அமைந்துள்ளது என்று கருதிய அமெரிக்கக்குடியேற்றங்கள் அச்சட்டங்களை ரகசியமாக மீற ஆரம்பித்தன. கள்ளவாணிபம் பெருகியது. இதனைத் தடுப்பதற்காக செயற்படுத்தும் சட்டம் இயற்றப்பட்டது. இதன்படி ஆங்கிலேயக் கப்பல்களும், குடியேற்றக் கப்பல்களும் பதிவுசெய்யப்பட வேண்டும். சுங்கவரி அதிகாரிகளுக்கு கப்பல்களையும், துறைமுகக் கிடங்குகளையும் சோதனை செய்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இதன்படி பல அமெரிக்க வணிகர்கள் தண்டிக்கப்பட்டனர். பேட்ரிக் ஹென்றி, ஜேம்ஸ் ஓட்டிஸ் ஆகிய வழக்கறிஞர்கள் இவர்களது வழக்குகளை வாதாடி பெரும்புகழ் பெற்றனர். அமெரிக்க வணிகர்கள் இந்த செயற்படுத்தும் சட்டத்தைக் கண்டித்தனர்.

### e) பிற வாணிப கட்டுப்பாட்டு சட்டங்கள்

1699 ல் இயற்றப்பட்ட 'கம்பளிச்சட்டம்' (Wollen Act) எந்தக் குடியேற்றமும் தான் உற்பத்தி செய்யும் கம்பளித்துணியை தனது எல்லைக்கு அப்பால் அனுப்பக் கூடாது என்று கூறுகிறது. 1732ல் இயற்றப்பட்ட தொப்பிச் சட்டப்படி (Hat Act) அமெரிக்காவில் தொப்பி செய்வோர்கள் தாங்கள் இத்தனை தொழிலாளர்களைத் தான் வைத்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. 1750-ல் இயற்றப்பட்ட இரும்புச் சட்டப்படி (Iron Act) அமெரிக்க குடியேற்றங்கள் இங்கிலாந்துக்கு இரும்பை ஏற்றுமதி செய்வதற்காக ஆலைகளைத் துவங்கலாம். ஆனால் இரும்புச் சாமான்களை அவைகள் உற்பத்தி செய்யக் கூடாது.

இவ்வாறு நாவாய் சட்டங்களும், தொழில் வாணிபக் கட்டுப்பாட்டுச்சட்டங்களும் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் தொழில்களை வளராமல் தடுப்பதையும், இங்கிலாந்தின் செய் தொழில்களை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது. இதனால் இந்தச் சட்டங்கள் பற்றிய தகராறுகள் தீவிரமடைந்தன.

## 3. குடியேற்ற மக்களின் உரிமை வேட்கை

வட அமெரிக்காவில் குடியேறியவர்களில் பெரும்பாலோர் தங்கள் தாய்நாட்டில் அரசியல் மற்றும் சமயத்துறையில் நிலவிய அதிகாரத்தை எதிர்த்து உரிமையோடு வாழ ஓடி வந்தவர்கள்.

எனவே தங்கள் உயிரினும் மேலான உரிமைகளைக் காக்க போராடியதில் வியப்பில்லை. தங்கள் நாடு விதித்த புதிய கட்டுப் பாடுகளை அவர்கள் விரும்பவில்லை. புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியர் சார்லஸ் எம்.ஆன்ட்ரூஸ் குறிப்பிட்டதுபோல் "அமெரிக் காவின் புதுமை மிகு குலமானது புதிய தேவை, புதிய ஆசை, புதிய எண்ணம், புதிய கருத்து, புதிய கண்ணோட்டம் ஆகியவைகளை குடியேற்ற மக்களிடையே தோற்றுவித்தது".

மேலும் குடியேற்ற கல்வி அறிஞர்களான பெஞ்சமின் பிராங்ளின், தாமஸ் ஜெபர்சன் போன்றோர் தங்கள் எழுத்தாற்றல் மூலமாகவும், சொற்பொழிவுகள் மூலமாகவும் ஜனநாயகக் கருத்துக் களையும் மக்களின் உரிமை வேட்கையையும் வளர்த்தார்கள். ஜான் லாக் என்பவரின் 'அரசாங்கத்தைப் பற்றிய இரண்டு நூல்கள்' (The Two Treatises on Government) என்ற நூல் அமெரிக்கர்களின் உரிமை வேட்கை எழுவதற்கு ஒரு தூண்டு கோலாக அமைந்தது. எனவே தான் தங்கள் தொழில்கள், வாணிபம், உரிமை ஆகியவற்றின் மீது விதிக்கப்பட்ட கட்டுப் பாடுகளை எதிர்த்துப் போராடத் துணிந்தனர்.

## 4) சமயத் துறையில் குடியேற்ற மக்களிடம் காணப்பட்ட மனக்கசப்பு

வட அமெரிக்காவில் குடியேறியவர்கள் பெரும்பாலும் சமய சீர்திருத்தவாதிகளாகவும், பல்வேறு சமயப் பிரிவுகளைச் சார்ந்தவர்களாகவும், சமய சுதந்திர வேட்கை கொண்டவர் களாகவும் இருந்தனர். மேலும் இவர்கள் சமயத்தின் பெயரால் சொந்த நாட்டிலிருந்து விரட்டப்பட்டவர்கள் ஆவர். எனவே இந்த மக்களிடம் சமய சகிப்புத் தன்மை நிலவியது. ஆனால் இங்கிலாந்திலிருந்த ஆங்கிலத் திருச்சபை (Anglican Church) அமெரிக்காவில் அதிகாரப்பூர்வமான, அங்கீகரிக்கப் பட்ட திருச்சபையாக விளங்கியது. இந்த திருச்சபையின் கட்டுப்பாடு களை குடியேற்ற மக்கள் விரும்பவில்லை. மதஸ்தாபனத்திற்காக வரிகள் கட்டுவதை எதிர்த்தனர். திருச்சபையைச் சேர்ந்த அதிகார வர்க்கத்தையும் பலர் விரும்பவில்லை.

## 5) ஆட்சி அமைப்பில் காணப்பட்ட குறைபாடுகள்

வட அமெரிக்காவில் நிறுவப்பட்ட குடியேற்றங்கள் பலவும் இங்கிலாந்து அரசரிடம் பட்டயம் பெற்ற வாணிபக் கம்பெனி களாலோ, தனிநபர்களாலோ நிறுவப்பட்டவை ஆகும். 1752-க்குப் பிறகு எட்டு குடியேற்றங்கள் அரசரின் குடியேற்றங்களாக இருந்தன. இவற்றின் ஆளுநர்கள் இங்கிலாந்திலிருந்தே நியமிக்கப்பட்டனர். இந்த ஆளுநரின் அதிகாரங்களை குடியேற்றங்களின் சட்ட

மன்றங்கள் கட்டுப்படுத்தி வந்தன. ஆளுநருக்கும், சட்டமன்றங்களுக்கும் இடையே அதிகாரப் போட்டி நிலவியது. யார் அதிக அதிகாரம் கொண்டவர்கள் என்ற சச்சரவுகள் ஏற்பட்டது.

அதேபோல் குடியேற்ற நாடுகள் இயற்றிய சட்டங்களை ஆங்கிலப் பாராளுமன்றம் நிராகரிக்கும் உரிமை பெற்றிருந்தது. ஆங்கிலப் பாராளுமன்றமே திறமை வாய்ந்தது என்றும், குடியேற்ற நாடுகள் அதன் ஆதிக்கத்துக்குக் கட்டுப்பட்டவை என்று ஆங்கிலேயர் வாதாடினர். இதனை குடியேற்ற மக்கள் வெறுத்தனர். அடக்கு முறை ஆட்சிக்குக் காரணமான ஆளுநர்களின் ஆட்சி ஒழிய வேண்டும் என்றும், அமெரிக்க குடியேற்றங்களுக்கு சட்டம் இயற்ற ஆங்கிலப் பாராளுமன்றத்துக்கு அதிகாரம் இல்லை யென்றும் அமெரிக்கர்கள் வாதிட்டனர்.

## 6. ஏழாண்டுப் போரினால் ஏற்பட்ட விளைவுகள்

ஏழாண்டுப் போர் அமெரிக்க சுதந்திரப்போருக்கு கீழ்க்கண்ட பல வழிகளில் காரணமாக அமைந்தது.

a) ஏழாண்டுப் போரின் விளைவாக வட அமெரிக்காவில் இருந்த பிரெஞ்சுப் பகுதிகள் அனைத்தையும் இங்கிலாந்து பெற்றது. இதனால் பதிமூன்று குடியேற்றங்களிலும் பிரெஞ்சு அபாயம் பற்றிய பயம் அடியோடு நீங்கிவிட்டது. ஸ்பானியர்கள் விரட்டப்பட்டு விட்டனர். இதனால் குடியேற்ற மக்களுக்கு இனி இங்கிலாந்தின் உதவி தேவையில்லாமல் போய்விட்டது.

b) மேலும் ஏழாண்டுப் போரில் பல அமெரிக்கர்கள் நல்ல ராணுவப் பயிற்சி பெற்றனர். அவர்களிடையே தன்னம்பிக்கை வளர்ந்தது. தாங்கள் இங்கிலாந்துப் போர்வீரர்களை விட திறமையாக போரிட முடியும் என்று உணர்ந்து கொண்டனர். எனவே ஆங்கிலேயரை எதிர்த்து போரிட்டு வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கை அமெரிக்கர்களிடையே ஏற்பட்டது.

c) ஏழாண்டுப் போரின் போது பல குடியேற்றப் பகுதியினரும் தோளோடு தோள் சேர்ந்து போரிட ஒரு வாய்ப்பு கிடைத்தது. இதனால் அவர்களிடையே ஒரு ஒற்றுமை மனப்பான்மை வளர்ந்தது. பல குடியேற்றங்களையும் ஒன்றாக இணைக்கும் எண்ணமும் அப்போது பலருக்கு ஏற்பட்டது. 1754-ல் ஏழு குடியேற்ற நாடுகள் சேர்ந்து நடத்திய ஆல்பனி காங்கிரஸ் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். அமெரிக்கா ஒரே நாடு என்ற கருத்து மக்கள் மனதில் வேரூன்ற ஆரம்பித்தது.

d) ஏழாண்டுப் போரில் இங்கிலாந்துக்கு பெரும் பொருள் செலவாயிற்று. அதன் கடன் சுமை இதனால் அதிகரித்தது. போரில்

ஏற்பட்ட செலவின் ஒரு பகுதியை அமெரிக்கர்கள் ஏற்க வேண்டுமென இங்கிலாந்து மன்னரும், பாராளுமன்றமும் குடியேற்ற நாடுகள் மீது புதிய வரிகள் விதித்தன. இதுவே இறுதியில் சுதந்திரப் போருக்கு வழி நடத்திச் சென்றது.

## 7) 1763-ம் வருடப் பிரகடனம்

ஏழாண்டுப் போரில் பிரெஞ்சுக்காரர்களின் தோல்விக்குப் பிறகு குடியேற்ற மக்கள் அப்பலேச்சியன் மலைத் தொடருக்கு அப்பாலுள்ள செழிப்பான ஓகியோ சமவெளியில் குடியேறலாயினர். ஆனால் அப்பகுதியில் வாழ்ந்து வந்த செவ்விந்தியர்கள் பாண்டியாக் (Pantiac) என்ற தலைவரின் கீழ் ஒன்று திரண்டு எதிர்க்க ஆரம்பித்தனர். இந்தக்கிளர்ச்சியை இரண்டு ஆண்டுகள் போரிட்டு பெருத்த உயிர் சேதத்திற்குப் பிறகு இங்கிலாந்து அடக்கியது. எனவே இனி வெள்ளையர்களுக்கும் செவ்விந்தியர் களுக்கும் ஏற்படும் மோதலைத் தவிர்கவே 1763-ல் ஒரு பிரகடனத்தை இங்கிலாந்து வெளியிட்டது.

இதன்படி அப்பலேச்சியன் மலைத் தொடருக்கப்பால் வெள்ளையர் சென்று குடியேறக்கூடாது என்று கூறப்பட்டது. நில வணிகர்கள், நிலம் பெற எண்ணிய குடியானவர்கள் இந்த பிரகடனத்தினால் ஆத்திரமடைந்தனர். மேலும் இந்த பிரகடனத்தின் படி ஒரு நிலைப்படை அமைக்கவும் அதன் செலவை குடியேற்ற மக்கள் ஏற்கவும் வற்புறுத்தப்பட்டது. இதனை குடியேற்ற மக்கள் கடுமையாக எதிர்த்தனர்.

## 8) கிரன் வில்லின் புதிய வரிகள்

a) அமெரிக்க குடியேற்ற நாடுகளைப் பாதுகாப்பது எப்படி என்ற பிரச்சனையில் இங்கிலாந்துக்கும் குடியேற்ற நாடுகளுக்கும் இடையே மனக்கசப்பு ஏற்பட்டது. வட அமெரிக்காவைப் பாதுகாப்பதற்காக பத்தாயிரம் பேர் கொண்ட ஒரு படையை குடியேற்ற நாடுகளில் நிறுத்த வேண்டியதிருந்தது. அந்தச் செலவுக்காக நிதிதிரட்டும் நோக்கத்துடன் 1763-ல் இங்கிலாந்து பிரதமரான கிரன்வில் சுங்க வரியை கண்டிப்பாக வசூல் செய்ய முடிவு செய்தார். அதன்படி, 1764-ல் 'சர்க்கரைச்சட்டத்தை' இயற்றினர். இச்சட்டம் மேற்கிந்தியத் தீவுகளிலிருந்து கள்ளத்தனமாக் கொண்டு வரப்படும் வெல்லப் பாகுவை தடுப்பதை நோக்கமாகக் கொண்டது. மேலும் இச்சட்டம் மது வகைகள், பட்டு போன்ற ஆடம்பரப் பொருள்கள் மீதும் புதிய சுங்க வரிகளை விதித்தது.

b) 1764-ல் 'காகித நாணயச்சட்டம்' (Currency Act) ஒன்றை

இயற்றி அதன்படி காகித நாணயங்களை குடியேற்றங்கள் அச்சடித்து வெளியிடுவது தடுக்கப்பட்டது.

c) 1765ல் படைக்கலகச் சட்டம் (Mutiny Act) ஒன்று இயற்றப்பட்டது. இதன்படி, தேவைப்படும் பொழுது ஆங்கிலப் போர் வீரர்களுக்கு தங்குமிடம், உணவு ஆகியவற்றைக் குடியேற்றக்காரர்கள் அளித்து உதவ வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

இந்த சட்டங்கள் அனைத்தையுமே அமெரிக்கர்கள் எதிர்த்தனர்.

## 9) முத்திரைச் சட்டம்: Stamp Act, 1765

கிரன்வில் இயற்றிய சட்டங்களில் குறிப்பிடத்தக்கது முத்திரைச் சட்டமாகும். இதனை இங்கிலாந்து பாராளுமன்றம் 1765, மார்ச் மாதம் இயற்றியது. இதன்படி சட்டபூர்வ ஆவணங்கள், சட்ட நடைமுறைகள், உயில்கள், நில உரிமைகள், லைசென்சுகள் ஆகியவை முத்திரையிடப் பட்ட காகிதங்களில் எழுதப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. இதுவரை ஆங்கில அரசு குடியேற்றங்கள் மீது நேரடி வரிகளை விதித்ததில்லை. இந்த சட்டத்தின்படி வருடத்திற்கு ஒரு லட்சம் பவுண்ட் வரிவசூல செய்ய திட்டமிடப்பட்டது. எனவே இந்த சட்டத்திற்கு அமெரிக்காவில் கடுமையான எதிர்ப்பு தோன்றியது.

## முத்திரைச் சட்டத்திற்கு எதிர்ப்பு

வருமானத்திற்காக அமெரிக்கர்கள் மீது இங்கிலாந்து வரி போடுவதை சட்ட விரோதம் என்று அமெரிக்கர் கருதினர். பல பத்திரிக்கைகளும், அறிஞர்களும் இச்சட்டத்திற்கு எதிராக வாதாடினர். முத்திரைச்சட்டம் இயற்றிய இங்கிலாந்து சீக்கிரமே நாம் மூச்சு விடும் காற்றுக்கும், சூரிய ஒளிக்கும், நாம் அடக்கம் செய்யப்படும் நிலத்திற்கும் வரிப்போடுவார்கள்' என்று சாடினர். வர்ஜினியாவில் பாட்ரிக் ஹென்றி (Patrick Henry) என்பவர் தலைமையில் எதிர்ப்பியக்கம் வலுவடைந்தது. ஆங்கிலப் பாராளுமன்றத்தில் 'பிரதிநிதித்துவம் இல்லை என்றால் வரிவிதிக்கும் உரிமையும் இல்லை' (No Taxation Without Representation) என்று முழங்கினர். உரிமைகளின் வாரிசுகள் (Sons of Liberty) என்ற இயக்கத்தினர் பத்திரங்களை எரித்தனர். பத்திரங் களை விற்பனை செய்த விற்பனையாளர்களை அச்சுறுத்தினர். பாட்ரிக் ஹென்றி 'வர்ஜினியா சட்டசபை எந்தெந்த வரிகளை விதிக்கிறதோ அந்த வரியை மட்டுமே வர்ஜினிய மக்கள் கட்ட வேண்டும்' என்ற புகழ்பெற்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

## முத்திரைச் சட்டம் வாபஸ்

ஜேம்ஸ் ஓட்டிஸ் என்பவர் குடியேற்ற நாடுகளின் பிரதிநிதிகளின் முத்திரைச்சட்ட மாநாட்டை கூட்ட வற்புறுத்தினார். அதன்படி 1765, அக்டோபர் 7-ம் தேதி நியுயார்க் நகரில் ஒன்பது மாநிலங்கள்கூடி முத்திரைச் சட்டத்தை எதிர்த்தன. இந்த மாநாடு அரசருக்கு கோரிக்கை மனுவை அனுப்ப முடிவு செய்தது. ஆனால் கலகங்களையும், கோரிக்கை மனுக்களையும் பாராளு மன்றம் கண்டுகொள்ளவில்லை. உரிமைகளின் வாரிசு என்ற இயக்கம் முத்திரைச்சட்டம் விலக்கப்படும் வரை இங்கிலாந்து பொருட்களை பகிஷ்கரிக்க கோரிக்கை விடுத்தது. இதனால் இங்கிலாந்துப் பொருட்களின் இறக்குமதி பாதியாகக் குறைந்து விட்டது. எனவே பாராளுமன்றம் 1766, மார்ச் 18-ல் முத்திரைச் சட்டத்தை ரத்து செய்தது. மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். ஆனால் அதே ஆண்டு அறிவிப்புச் சட்டம் (Declaratory Act) ஒன்றை இயற்றி, அதன்படி 'இங்கிலாந்து பாராளுமன்றத்திற்கு குடியேற்ற நாடுகள் மீது வரிவிதிக்க உரிமை உண்டு' என்பது வற்புறுத்தப்பட்டது. இதனையும் அமெரிக்கர்கள் வெறுத்தனர்.

## 10. டவுண்ஷெண்டின் வரிகள்

சாத்தாம் மந்திரி சபையில் கருவூலத் தலைவராக இருந்த சார்லஸ் டவுண்ஷெண்ட் 1767-ல் இரண்டு மசோதாக்களை பாராளுமன்றத்தில் கொண்டுவந்தார். அதன்படி குடியேற்றங்கள் இறக்குமதி செய்யும் பொருட்களான கண்ணாடி, ஈயம் (Lead), வார்னிஷ், காகிதம், தேயிலை ஆகியவற்றின் மீது வரிவிதிக்கப் பட்டது. முத்திரைச் சட்டம் இயற்றப்பட்ட போது அது 'உள்நாட்டு வரிகள்' என்று அமெரிக்கர்கள் எதிர்த்தனர். எனவே இறக்குமதி செய்யப்படும் இந்த பொருடகளுக்கு வரிவிதிப்பதை அமெரிக்கர் எதிர்க்கமாட்டார்கள் என்று கருதினார். இந்த சுங்கச் சட்டத்தின் படி (Duty Act) சுங்கவரி களை வசூலிப்பதற்காக 'சுங்க ஆணையர் வாரியம்' ஒன்று அமைக்கப்பட்டது. டவுண்ஷெண்ட் கொண்டு வந்த இன்னொரு சட்டப்படி கலகச் சட்டத்தை எதிர்த்த நியுயார்க் சட்டசபையானது செயல்பட விடாமல் நிறுத்தி வைக்கபட்டது.

ஆங்கிலப்பாராளுமன்றம் விதிக்கும் எல்லா வரிகளையும் எதிர்க்க வேண்டும் என்று மசாசுசெட்ஸ் சட்டமன்றம் ஒரு சுற்றறிக்கை யை (Letters Circuler) அனுப்பியது. எல்லாக் குடியேற்றங்களும் மசாசுசெட்ஸ் மாநிலத்திற்கு பேராதரவு தந்தன. 1768-ல் பில்டெல்பியா, நியுயார்க் ஆகிய நகரங்களின் வணிகர்கள் பாஸ்டன் வணிகர்களுடன் சேர்ந்து இங்கிலாந்துப் பொருட்களை விற்பனை செய்வதை நிறுத்தினர். 'இறக்குமதி மறுப்பு ஒப்பந்தம்'

ஒன்றையும் அவர்கள் செய்து கொண்டனர். இவ்வாறு இங்கிலாந்தின் அரசியல், பொருளாதாரப் பிடியிலிருந்து விடுபட குடியேற்ற மக்கள் திட்டமிட்டனர்.

## பாஸ்டன் படுகொலை

இதற்கிடையில் பாஸ்டனில் நியமிக்கப்பட்ட சுங்க அதிகாரிகளுக்கு எதிராக சாமுவேல் ஆடம்ஸ் என்பவர் தலைமையில் 'உரிமையின் வாரிசுகள்' என்ற புரட்சியாளர்கள் கலகத்தில் ஈடுபட்டனர். எனவே ஆங்கில அரசு அதிகாரிகளின் பாதுகாப்பிற்காக நான்கு பிரிவு படைகளை பாஸ்டனுக்கு அனுப்பியது. சிவப்பு நிற உடைகளை அணிந்த இந்த படையுடன் புரட்சியாளர்கள் சண்டையில் இறங்கினர். 1770 மார்ச் 5-ம் தேதி புரட்சியாளர்களுக்கும், துறைமுகத் தொழிலாளர்களும் சுங்கத் துறை அலுவலகத்தைத் தாக்கினர். அதில் ஓர் ஆங்கிலச் சிப்பாய் கொல்லப்பட்டார். எனவே ஆங்கிலப்படை கூட்டத்தை நோக்கிச் சுட்டதில் ஐந்து பேர் கொல்லப்பட்டனர். இதுவே 'பாஸ்டன் படுகொலை' எனப்பட்டது. பாஸ்டன் படுகொலைகளைப் பற்றி சாமுவேல் ஆடம்ஸ் பத்திரிக்கையில் உணர்ச்சி பொங்க எழுதி இங்கிலாந்துக்கு எதிராக வெறுப்புணர்ச்சி ஏற்படச் செய்தார்.

புதிய பிரதமராகப் பதவி ஏற்ற நார்த்பிரபு 1770-ல் டவுண் ஷெண்ட்டின் சுங்கச் சட்டத்தை ரத்து செய்தார். ஆனால் தேயிலை மீதான வரி மட்டும் ரத்து செய்யப்படவில்லை.

## 8) பாஸ்டன் தேநீர் விருந்து: Boston Tea Party, 1773

1770-ம் ஆண்டுக்குப் பிறகு அமெரிக்க குடியேற்ற மக்கள் இங்கிலாந்து சட்டங்களை கடுமையாக எதிர்க்கத் தொடங்கினர். 1772-ஜூன் மாதம் கெஸ்பி (Gaspee) என்ற ஆங்கிலக் கப்பல் ஒன்றைப் பிடித்து ரோடு ஐலண்டில் எரித்துவிட்டனர். பாஸ்டனில் சுங்க இலாகா அதிகாரி ஒருவரைப் பிடித்து எரித்து விட்டனர். 1773-க்குப் பிறகு அமெரிக்கர்கள் ஒற்றுமையுடனும் உணர்ச்சியுடனும் இங்கிலாந்து சட்டங்களை எதிர்க்கத் தொடங்கினர்.

இச்சமயத்தில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பனி பணமுடையினால் திவாலாவாகும் நிலையிலிருந்ததால் அதற்கு உதவி செய்வதற்காக 1772-ல் தேயிலைச் சட்டம் (Tea Act) ஒன்றை நார்த் பிரபு இயற்றினார். இதன்படி அந்தக் கம்பனி நேரடியாக, சுங்கவரி செலுத்தாமல் அமெரிக்க குடியேற்றங்களில் தேயிலையை விற்பனை செய்ய அனுமதியளிக்கப்பட்டது. இதனால் தேயிலை விலை குறைந்தது. மலிவானவிலையில் தேயிலை விற்கப்படும் பொழுது தேயிலை வரிகளைப் பற்றி மக்கள் கவலைப்

படமாட்டார்கள் என்று நார்த் பிரபு நம்பினார்.

ஆனால் நடந்தது வேறு, குறைந்தவிலையில் தேயிலை கிடைத்தாலும் மக்கள் அந்நிய தேயிலையை ஒதுக்கி விட்டு காப்பிகுடிக்க ஆரம்பித்தனர். தேயிலைச் சட்டத்தால் பாதிக்கப் பட்ட அமெரிக்க வணிகர்கள் கிளர்ச்சியில் இறங்கினர். கம்பனியின் தேயிலை கப்பலிருந்து இறக்குவதையும், விற்கப்படு வதையும் அனுமதிப்பதற்கு பல குடியேற்ற நாடுகளின் சட்ட மன்றங்கள் மறுத்தன. நியுயார்க் வந்த தேயிலைக்கப்பல் திருப்பி அனுப்பப் பட்டது. ஆனால் பாஸ்டனில் ஆவேசம் எல்லையைக் கடந்தது. 1773-டிசம்பர் 16-ம் தேதி மாலை பாஸ்டன் துறைமுகம் வந்து சேர்ந்த கப்பலுக்குள் சாமுவேல் ஆடம்ஸ் தலைமையில் செவ்விந்தியர் போல வேடம்பூண்ட 150பேர் புகுந்தனர். பெருந்திர ளான மக்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே 18,000 பவுண்ட் மதிப்புள்ள சுமார் 343 தேயிலைப் பெட்டிகளை கடலில் தூக்கி எறிந்தனர். இதுவே பாஸ்டன் தேநீர் விருந்து எனப்பட்ட உணர்ச்சி மயமான நிகழ்ச்சியாகும். இந்த நிகழ்ச்சியைப் பற்றிய செய்தி எல்லாக் குடியேற்றங்களிலும் காட்டுத்தீ போல் பரவியது. மக்கள் எழுச்சி அடைந்தனர்.

### 9) தாங்கமுடியாத சட்டங்கள்: Untolerable Acts, 1774

'பாஸ்டன் தேநீர் விருந்து' நிகழ்ச்சியில் நார்த் பிரபு தலைமை யிலான டோரி அரசும், அரசர் மூன்றாம் ஜார்ஜும் கடும்சினம் கொண்டனர். பாஸ்டன் நகரம்மீதும், மசாசூசெட்ஸ் மாநிலத்தின் மீதும் நடவடிக்கை எடுக்க நான்கு அடக்குமுறைச் சட்டங்கள் 1774-ல் இயற்றப்பட்டன. ஆனால் இச்சட்டங்களை எட்மண்ட் பர்க் என்பவர் எதிர்த்தார். இந்த நான்கு தாங்க முடியாத சட்டங்களின் படி,

a) கிழக்கிந்திய கம்பெனிக்கு நஷ்ட ஈடு தரும்வரை பாஸ்டன் துறைமுகம் மூடப்பட்டது.

b) மசாசுசெட்ஸ் மாநிலத்தின் பட்டயம் ரத்து செய்யப்பட்டு அதன் தன்னாட்சி உரிமை பறிக்கப்பட்டது. அதன் சட்டமன்றம் கலைக்கப் பட்டது. தளபதி தாமஸ் கேஜ் (Thamas Gage) என்பவர் அதன் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

c) மசாசுசெட்சில் நிறுத்தப்பட்டிருந்த ஆங்கிலப் படை களுக்கு தங்குமிடம் அளிக்க கட்டாயப்படுத்தப்பட்டது.

d) சட்டத்தை மீறி செயல்படுபவர்களும், கொலைக்குற்றம் செய்பவர்களும் விசாரணைக்காக இங்கிலாந்து கொண்டு செல்லப் படுவர்.

ஆனால் இந்த சட்டங்களுக்கு எதிராக எல்லா

இடங்களிலும் கிளர்ச்சிகள் நடை பெற்றது. மசாசுசெட்ஸ் சட்ட மன்றம் போட்டி அரசாங்கம் ஒன்றை நிறுவியது.

### 10) கியுபெக் சட்டம் : Qubec Act, 1774

தாங்கமுடியாத சட்டங்களை அடுத்து 'கியுபெக் சட்டம்' ஒன்று இயற்றப்பட்டது. இதன்படி கனடாவிலிருந்த பிரெஞ்சு மொழி பேசிய ரோமன் கத்தோலிக்க மக்களுக்கு ஒரு சிவில் அரசாங்கத்தை அமைக்க முயற்சி செய்யப்பட்டது. ஓகியோ, மிசிசிப்பி ஆறுகளுக்கிடையே இருந்த பகுதிகளில் வாழ்ந்த பிரெஞ்சு இன மக்களை உள்ளடக்கும் வகையில் கியுபெக் மாநிலத்தின் எல்லை விரிவாக்கப்பட்டன. இச்சட்டத்தின் மூலம் ரோமன் கத்தோலிக்கர்களுக்கு அரசியல் உரிமை அளிக்கப் பட்டன. கத்தோலிக்கப் பாதிரியார்கள் அங்கு 'டைத்' என்ற திருச்சபை வரி வசூலிப்பதையும் இச்சட்டம் அனுமதித்தது.

அமெரிக்கர்கள் இச்சட்டத்தையும் கடுமையாக எதிர்த்தனர். 'ரோம் நகரிலிருந்த போப் பாண்டவரின் கீழ் அமெரிக்கர்களை சமயத்துறையே கட்டுப்படுத்த வேண்டும்' என்ற சதி லண்டனில் உருவாகிறது என்று குடியேற்ற மக்கள் நம்பினர். மேலும் மேற்கு நோக்கி விரிவடைவதை கியுபெக் சட்டம் தடுத்துவிடும் என்று குடியேற்ற மக்கள் அச்சம் அடைந்தனர். எனவே வெறுப்பும் கோபமும் கொண்ட குடியேற்ற மக்கள் இங்கிலாந்துக் கொள் கையை ஒற்றுமை யுடன் எதிர்க்கத் துணிந்தனர்.

### 11) பிலடெல்பியா காங்கிரஸ்: Philedelphia Congress, 1774

தண்டிக்கப்பட்ட மசாசுசெட்ஸ் மக்களுடன் சேர்ந்து போராடுவதற்கு ஆதரவாக மற்ற மாநிலங்களும் தீர்மானங்கள் இயற்றின. நாடெங்கிலும் 'செய்தி தொடர்பு குழு' அமைக்கப் பட்டது. ஒரு குடியேற்ற காங்கிரஸ் (Continental Congress) கூட்டப்பட வேண்டும் என்று வர்ஜினியா அழைப்பு விடுத்தது. இதன் அடிப்படையில் கலைக்கப்பட்ட மசாசுசெட்ஸ் பிரதிநிதிகள் சபை 1774, ஜுன் 17ல் ஒரு குடியேற்ற காங்கிரஸைக் கூட்ட ஏற்பாடு செய்தது. ஜார்ஜியா தவிர பிற 12 மாநிலங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் 1774, செப்டம்பர் 5ல் பிலடெல் பியாவிலுள்ள 'கார்பெண்டர் கூடத்தில்' (Carpenter's Hall) கூடினர்.

இந்த காங்கிரசில் மசாசுசெட்சிலிருந்து ஜான் ஆடம்ஸ், சாமுவேல் ஆடம்ஸ், நியுயார்க்கிலிருந்து ஜான்ஜே, பென்சில் வேனியாவிலிருந்து ஜான்டிக்கன்சன், வர்ஜினியாவில் இருந்து ஜார்ஜ் வாஷிங்டன் எட்மண்ட் ரண்டால்ப், பேட்ரிக் ஹென்றி, மேரிலாந்திலிருந்து சார்லஸ் கரோல், தென்கரோலினாவிலிருந்து ஜான் ரட்லட்ஜ் போன்ற புகழ் பெற்ற தலைவர்கள் பங்கேற்றனர்.

இந்த காங்கிரசில் கீழ்கண்ட முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன.

a) உரிமைகள் மற்றும் குறைகள் பிரகடனம் (Declaration of Rights and Grievanses) ஒன்று நிறைவேற்றப்பட்டது. இது குடியேற்ற நாடுகளின் உரிமைகளையும் அவர்களது குறைகளையும் பட்டிய லிட்டுக் காண்பித்தது அமெரிக்க குடியேற்ற மக்கள்மீது வரிவிதிக்க இங்கிலாந்து பாராளுமன்றத்துக்கு உரிமை இல்லை என்று கூறியது.

b) தங்களது அரசியல் மற்றும் பொருளாதாரக் குறைகள் அனைத்தும் களையப்படவேண்டும் என்று மூன்றாம் ஜார்ஜுக்கும், இங்கிலாந்து மக்களுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

c) ராணுவ ரீதியில் அமெரிக்க குடியேற்றங்கள் தங்கள் வலிமையினைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

d) மசாசுசெட்ஸ் மீது விதிக்கப்பட்ட தண்டனைச் சட்டங்கள் கண்டிக்கப்பட்டது. இங்கிலாந்து அடிமைகள் உட்பட எந்த பொருளும் இறக்குமதி செய்யப்படவோ, விற்கவோ கூடாது. 1775 செப்டம்பர் முதல் எந்தப் பொருட்களையும் இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யக் கூடாது என்று தீர்மானம் இயற்றப்பட்டன.

பிலடெல்பியா காங்கிரஸ் தீர்மானங்கள் நிறைவேற்றப் படுவதைக் கண்காணிக்க 'குழுக்கள்' (Association) அமைக்கப் பட்டன. மசாசூசெட்சில் ஆயுதங்களும் வெடிமருந்துகளும் திரட்டப்பட்டன. ஒரு நிமிட நேரத்திற்குள் ஒன்றுகூடும்படியான 'நிமிடவீரர்கள்' (Minutesmen) என்ற அமைப்பு அமைக்கப்பட்டு அதில் வீரர்கள் சேர்க்கப்பட்டனர். போர் துவங்கும் நேரம் வந்துவிட்டது.

## போரின் போக்கு : Course of the war

### லெக்சிங்டன் போர்: 1775, ஏப்ரல் 19

பலமாதங்களாகவே மசாசுசெட்ஸ் மக்கள் போர் புரிவதற்காக படைகளையும், ஆயுதங்களையும், போர்க்கருவி களையும் தயாரித்து வந்தனர். இதனை குடியேற்ற காங்கிரசும் ஊக்குவித்து வந்தது. மசாசு செட்ஸ் மாநிலத்தில் ஜான்ஹன்காக் (JohnHancock) தலைமையில் அமைக்கப்பட்ட பாதுகாப்பு குழுவும் மோதலுக்காக 'நிமிட மனிதர்களை' தயார் நிலையில் வைத்து இருந்தது. இந்த நிலையில் சாமுவேல் ஆடம்ஸ், ஜான் ஹான்ஹாக் ஆகியோரைக் கைது செய்ய, பாஸ்டனில் இங்கிலாந்து படைகளின்

தளபதியாக இருந்த தாமஸ் கேஜ ுவுக்கு உத்தரவிடப்பட்டது. 1775 ஏப்ரல் 18-ம் தேதி ஆயிரம் வீரர் களைக்கொண்ட படையுடன் கேஜ் புறப்பட்டார். லெக்சிங்டன் (Lexington) என்ற இடத்தில் நடைபெற்ற போரில் ஏழு அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர். ஒன்பது பேர் காயமடைந்தனர்.

அதன் பிறகு ஆங்கிலப்படைகள் கன்கார்டு (Concord) என்ற இடத்தில் நிமிட மனிதர்களுடன் மோதிய பின் மீண்டும் லெக்சிங்டன் புறப்பட்டது. திரும்பும்போது மரங்கள், குன்றுகள் பின்னால் மறைந்து கொண்டு குடியேற்றப்படை சுட்டது. இதில் 273 ஆங்கில வீரர்கள் மடிந்தனர். 93 அமெரிக்கர்கள் கொல்லப் பட்டனர். இதுவே சுதந்திரப் போரின் முதலாவது நிகழ்ச்சியாகும்.

## இரண்டாவது கண்ட காங்கிரஸ், 1775 மே 10

லெக்சிங்டன், கன்கார்டு ஆகியஇடங்களில் நடைபெற்ற போருக்குப் பின்னர் மூன்று வாரம் கழித்து இரண்டாவது கண்ட காங்கிரஸ் பிலடெல்பியாவில் கூடியது. இதிலும் ஜார்ஜியா தவிர மற்ற எல்லா மாநிலங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்தனர். சில மாதங்கள் கழித்து ஜார்ஜியாவும் சேர்ந்து கொண்டது. இந்த காங்கிரசில் ஜான் ஹான்காக் தலைமை தாங்கினார். இதில் காங்கிரசின் நோக்கங்கள் வரையறுத்துக் கூறப்பட்டது. இந்த காங்கிரஸ் அரசாங்கமாகச் செயல்பட்டு படைகளைத் திரட்டுதல், காகித நாணயம் அச்சிடுதல், போர்ச் செலவுக்காக கடன் வாங்குதல் போன்ற அனைத்து வேலை களையும் செய்தது.

1775, ஜுலை 5-ம் தேதி காங்கிரஸ் 'ஆலிவ் கிளை விண்ணப்பம்' ஒன்றினை இங்கிலாந்து அரசருக்குச் சமர்பித்தது. இதில் அரசரிடம் அமெரிக்க மக்கள் விசுவாசம் கொண்டிருப்ப தாகவும், எனவே சமரச முடிவு காண நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறப்பட்டது. இதனை அரசர் மூன்றாம் ஜார்ஜ் நிராகரித்து விட்டு 'அமெரிக்கர்கள் கலக நிலையில் இருக்கின்றனர்' என்று அறிவித்தார்.

இந்த காங்கிரஸ் அடுத்து 'ஆயுத மேந்துவதற்கான காரணமும் அவசியமும் பற்றிய அறிக்கை' என்ற முக்கிய தீர்மானத்தை நிறைவேற்றியது. அடிமைப்படுவதைவிட சாவதற்கு தயாராக இருப்பதாக அறிவித்தது.

அடுத்து, குடியேற்றப் படை ஒன்றைத் திரட்டுவதற்கும், அதன் தலைமைத் தளபதியாக வர்ஜினியப் பிரதிநிதியான ஜார்ஜ் வாஷிங்டனை நியமிப்பதற்கும் முடிவு செய்யப்பட்டது. பாஸ் டனைச் சுற்றியிருந்த மக்கள் படைகள் உடனடியாக வாஷிங்டன் தலைமையின் கீழ் வைக்கப்பட்டன.

## பங்கர் குன்று போர் : Bunker Hill War


வாஷிங்டன் வருவதற்கு முன்பே புதிய இங்கிலாந்து படைகள் பாஸ்டனில் இருந்த இங்கிலாந்து தளபதி கேஜின் (Gage) படைகளை முற்றுகையிட்டன. அத்துடன் நகரை அடுத்து இருந்த பிரீட்ஸ் குன்று, பங்கர் குன்று (Breeds Hill, Bunker Hill) ஆகிய இரண்டையும் கைப்பற்றி விட்டது. கனடாவுக்குச் செல்லும் வழியில் உள்ள டிகோண்டராகா (Fort Ticonderoga) என்ற கோட்டையை 'பச்சை மலை இளைஞர்' (Green mountain boys) என்ற இளைஞர் குழு ஒன்று ஈதன் ஆலன் (Ethen Allen) என்பவர் தலைமையில் எல்லோரும் ஆச்சரியப்படும் படியாக 1775 மே, 10-ல் பிடித்தது.

பங்கர் குன்றிலிருந்து அமெரிக்கர்களை விரட்டுவதற்கு கேஜ் எடுத்த முதல் இரண்டு முயற்சிகள் வெற்றி பெறவில்லை. ஆனால் மூன்றாம் முறையாக 1775, ஜுன் மாதம் நடைபெற்ற போரில் அமெரிக்கப் படைகள் தோற்கடிக்கப்பட்டன. ஆனால் ஆங்கிலப் படைகள் ஆயிரம் வீரர்களை இழந்தது. தளபதி கேஜ் நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக வில்லியம் ஹோவ் (William Hove) என்பவர் ஆங்கிலப் படைகளின் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

இதற்கிடையில் குடியேற்றங்களின் வாணிபத்தை தடுப்பதற்காக கடல் முற்றுகையை இங்கிலாந்து ஆரம்பித்தது. இங்கிலாந்துக் கப்பல் களின் பீரங்கிகள் புதிய இங்கிலாந்தின் கடற்கரை நகரங்களை நோக்கி சுட்டன. 1776, மார்ச் 17-ல் வாஷிங்டன், டார்செஸ்டர் (Dorchester Heights) குன்றுகளைக் கைப்பற்றி அதில் பீரங்கிகளை அமைத்தார். பாஸ்டனில் இருப்பது ஆபத்தானது என்று உணர்ந்த ஆங்கிலேயர் வெளியேறினர். ஆம், இங்கிலாந்து ஆட்சியிலிருந்து விடுபட்ட முதல் நகரம் பாஸ்டன் ஆகும்.

## விடுதலைப்பிரகடனம் : Declaration of Independance

போர்க்களங்களில் படைகள் மோதிக் கொண்டிருந்த போது அமெரிக்கர்கள் தங்கள் அரசியல் போராட்டத்தையும் தொடர்ந்து நடத்தினர். இங்கிலாந்திலிருந்து சமீபத்தில் அமெரிக்கா வந்து குடியேறிய தாமஸ் பெயின் (Thomas Paine) என்பவர் 'பொது அறிவு' (Common Sense) என்ற சிறிய நூலை எழுதி 1776, ஜனவரியில் வெளி யிட்டார். இந்த நூல் அமெரிக்கரை மிகவும் கவர்ந்தது. அந்தக் காலத்தில் நிலவிய குழப்பங்களுக்கு சுதந்திரம் ஒன்று தான் மருந்து என்றார். 'விசுவாசம் காட்டுவதும் அதே நேரம் போர் புரிவதும் அறிவுக்குப் பொருந்தாத செயல்' என்று வாதிட்டார். இது அமெரிக்கர்கள் இடையே சுதந்திர உணர்ச்சியை ஊட்டியது ஆவேசப்படுத்தியது.



**பங்கர் குன்று**

1776, மே 15-ல் வர்ஜினியாவைச் சேர்ந்த ரிச்சர்ட் ஹென்றிலீ (Richard Henry Lee) என்பவர் காங்கிரசில் 'அமெரிக்காவுக்கு சுதந்திரம் வேண்டும்' என்று தீர்மானம் கொண்டு வந்தார். இதனடிப்படையில் விடுதலைப் பிரகடனம் தயாரிக்கவும், நேசக் கூட்டாட்சிக்கான அரசியலமைப்பை வரையவும். இரண்டு குழுக்கள் அமைக்கப்பட்டன.

விடுதலைப் பிரகடனத்தை வரைவதற்கு தாமஸ் ஜெபர்சன் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவில் ஜான் ஆடம்ஸ், பெஞ்சமின் பிராங்ளின் ரோஜர் ஷெர்மன், ராபர்ட் லிவிங்ஸ்டன் போன்றோர் இடம்பெற்றனர். சிறந்த எழுத்தாளரான ஜெபர்சன் ஆழ்ந்த கருத்துக்கள் அடங்கிய விடுதலை பிரகடனத்தை அழகிய ஆங்கிலத்தில் எழுதினார். முதல் பகுதியில் அரசாங்கம் பற்றியும் மக்கள் உரிமை பற்றியும் கூறப் பட்டிருந்தது.

"எல்லா மனிதர்களும் சமமாகப் படைக்கப்பட்டு இருக்கிறார்கள். படைத்தவனால் அவர்களுக்கு வாழ்க்கை உரிமை, சுதந்திர உரிமை, மகிழ்ச்சியை நாடும் உரிமை ஆகிய உரிமைகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த உரிமைகள் யாராலும் பறிக்கப்பட முடியாது. இந்த உரிமைகளைப் பெறுவதற்காகவே அரசுகள் நிறுவப்படுகின்றன. இந்த உரிமைகளை ஒரு அரசாங்கம் மீறுமானால் மக்கள் கிளர்ந்தெழுந்து புதிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு உரிமை உண்டு" என்று பிரகடனத்தில் கூறப்பட்டது.

பிரகடனத்தின் இரண்டாவது பகுதியில் குடியேற்றங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் பட்டியலிடப்பட்டிருந்தது. இங்கிலாந்து அரசரும், பாராளுமன்றமும் இந்த அநீதிகளை அகற்றுவதற்கு முன் வராததால் இங்கிலாந்து ஆட்சியிலிருந்து

குடியேற்றங்கள் விடுதலை பெற்றதாக அறிவிக்கப்பட்டது. "இந்த காங்கிரசில் கூடியுள்ள அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகளாகிய நாங்கள் ஐக்கியப்பட்டுள்ள இந்த குடியேற்ற நாடுகள் முழுசுதந்திரமடைந்துவிட்டன என்று இங்கு அறிவித்துக் கொள்கிறோம்" என்று அப்பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டது.

இதுவரை வெளியிடப்பட்டுள்ள அரசியல் பிரகடனங்களில் கருத்துத் தெளிவும் சொல்வல்லமையும் கொண்ட மிகச்சிறந்த சாசனங்களில் இதுவும் ஒன்றாகும். இது குடியாட்சித் தத்துவத்தை ரத்தினச் சுருக்கமாக கூறியுள்ளது எனலாம். இந்த விடுதலைப் பிரகடனத்தின் கருத்துக்கள் பிற்கால வரலாற்றில் அதிக விளைவுகளை ஏற்படுத்தின. எல்லா மக்களும் ஏற்றத்தாழ்வு இன்றியே படைக்கப் படுகின்றனர் என்ற கருத்து உலகம் முழுவதிலும் பல விளைவுகளை ஏற்படுத்தின. மக்களாட்சிக் கருத்து உலகம் முழுவதும் பரவுவதற்கு இது வழிவகுத்தது.

## சரடோகா வெற்றி : 1777

பாஸ்டனிலிருந்து தளபதி ஹோவ் வெளியேறியபின் புரூக்லின் என்ற இடத்தில் வாஷிங்டனைத் தோற்கடித்தார். ஆனால் வாஷிங்டன் 1776 கிறிஸ்துமஸ் தினத்தன்று டிரன்டன் என்ற இடத்தில் ஆங்கிலப் படைகளைத் தோற்கடித்தார். நியு ஜெர்சியின் பெரும்பகுதிகள் கைப்பற்றப்பட்டன.

1777-ல் நியு இங்கிலாந்தை மற்ற குடியேற்றங்களிலிருந்து துண்டிக்கும் திட்டம் ஒன்றை ஆங்கிலேயர் தீட்டினர். இதன்படி நடுவிலிருந்த நியூயார்க், ஆல்பனி ஆகிய இடங்களைப் பிடிக்க முடிவு செய்யப்பட்டது. இதன்படி தளபதி ஜான் பர்கோயின் தலைமையில் ஒரு படை வடக்கிலிருந்து தெற்காகவும், நியுயார்க்கிலிருந்து ஹோவின் படைகள் வடக்கிலிருந்தும் முன்னேறின. தளபதி ஹோவ் வாஷிங்டனை பிராண்டிவைன் **(Brandywine)** என்ற இடத்தில் தோற்கடித்து பிலடெல்பியாவைக் கைப்பற்றினார். பர்கோயின் டிக்கோண்டிரரவைப் பிடித்தார். ஆனால் பர்கோயின் படைகளுக்கு அமெரிக்கர் பெருந்தொல்லை கொடுத்தனர். பர்கோயினுக்கு மேல் உதவி கிடைக்க விடாமல் தடுத்தனர். செய்தி தொடர்பை தடுத்துவிட்டனர். இச்சூழ்நிலையில் அமெரிக்க தளபதி ஹொரேஷியோ கேட்ஸ் **(Horatio Gates)** என்பவர் சரடோகாவில் 1777, அக்டோபர் மாதம் 17-ம் தேதி பர்கோயினைத் தோற்கடித்தார். அவர் தனது ஐயாயிரம் படைவீரர்களுடன் சரணடைந்தார். இந்த சரடோகா வெற்றி அமெரிக்க சுதந்திரப் போரில் பெரிய திருப்பத்தை ஏற்படுத்தியது.

## பிரான்ஸ், ஸ்பெயின் நாடுகளின் ஆதரவு

அமெரிக்காவில் நடை பெற்ற போர்களை பிரான்சும் மற்ற ஐரோப்பிய நாடுகளும் கூர்ந்து கவனித்தன. முக்கியமாக பிரான்ஸ் நாடு 1763-ல் இங்கிலாந்திடம் தோற்றுப் போனதற்குப் பிறகு இங்கிலாந்திடம் பகைமை உணர்ச்சி கொண்டிருந்த அமெரிக்காவுடன் நட்புறவு கொண்டது. 1763-க்கு பிறகு அமெரிக்காவுக்கு மிகச்சிறந்த ஐரோப்பிய நட்புறவு நாடாக பிரான்ஸ் திகழ்ந்தது.

இதற்கிடையே அமெரிக்க விடுதலைப் போருக்கு ஆதரவு தரும் நாடுகளுடன் கடிதப் போக்குவரத்தை ஏற்படுத்த 'ஒரு ரகசிய செயற்குழு' ஒன்று அமைக்கப்பட்டது. இதற்கு பிராங்ளின் தலைவராக நியமிக்கப்பட்டார். அப்போது பிரான்ஸ் நாட்டின் வெளி உறவு அமைச்சராக இருந்த கவுண்ட் தெவர்கனிஸ் (Count Devergennes) என்பவர் மிகச் சிறந்த ராஜதந்திரி. அமெரிக்க விடுதலைப் போரின் விளைவாக பிரான்ஸ் சில நன்மைகளைப் பெற முடியும் என்று நம்பினார். எனவே அமெரிக்கர்களுக்கு வேண்டிய எல்லாப் படைக் கருவிகளையும் தருவதாக உறுதி கூறினார். அதன்படி ரகசியமாக அமெரிக்க வீரர்களுக்குத் தேவையான படைக்கருவிகளையும், வெடி மருந்துகளும் அனுப்பப்பட்டது. ஸ்பெயின் நாட்டு அரசரும் உதவி செய்தார்.

இதுவரை அமெரிக்க குடியேற்றங்களுக்கு அதிகாரப் பூர்வமான ஆதரவு அளிப்பதா வேண்டாமா என்று தயங்கிய பிரெஞ்சு அரசுக்கு, சரடோகாவில் அமெரிக்கர் பெற்ற வெற்றி நம்பிக்கையூட்டியது. அமெரிக்காவுடன் உடன்படிக்கை செய்து கொள்ள பிரான்ஸ் முன் வந்தது. அதன்படி 1778, பிப்ரவரியில் பிராங்கோ அமெரிக்கா உடன்படிக்கை கையெழுத்தானது. ஏற்கனவே லபாயட் (Lafayatt) என்பவர் தலைமையில் ராணுவ உதவி அளிக்கப்பட்டிருந்தது. இப்போது தளபதி ரோச்சம்போ (Rochambau) என்பவர் தலைமையில் ஆறாயிரம் போர் வீரர்களை பிரான்ஸ் அனுப்ப தயாரானது. கிராசி என்பவர் தலைமையில் கப்பற்படை அனுப்பப்பட்டது. இதற்கிடையில் ஹாலந்து, ரஷ்யா, டென்மார்க், ஸ்வீடன் ஆகிய நாடுகள் 'படையேந்திய நடுநிலை' (Armed Neutrality) என்ற ஒப்பந்தத்தை ஏற்படுத்தின. இதன்படி தங்களது கப்பல்கள் அமெரிக்காவுக்கு உதவியாக படைக் கலங்களை எடுத்து செல்கின்றனவா என்பதை சோதிக்க இங்கிலாந்துக்கு உரிமை இல்லை என்று அறிவிக்கப்பட்டது. இதனால் ஐரோப்பாவில் போர் மூண்டது. இவ்விதம் ஐரோப்பிய நாடுகள் அமெரிக்காவுக்கு உதவி செய்தன.

## யார்க்டவுண் வெற்றி : 1781

சரடோகா வெற்றிக்குப் பிறகு அமெரிக்காவின் வடக்கு

பகுதியில் போர் நிலை மறைந்தது. அமெரிக்க விடுதலைப் போரின் கடைசி இரண்டு ஆண்டுகளில் எல்லா நிகழ்ச்சிகளும் அமெரிக்காவின் தெற்கு பகுதிகளிலேயே நடைபெற்றன. சரடோகா போருக்குப் பிறகு ஹோவிற்குப் பதிலாக ஹென்றி கிளிண்டன் என்பவர் இங்கிலாந்து படைகளின் தலைமைத் தளபதியாக அனுப்பப்பட்டார். இவர் நியுயார்க்கில் படைகளை குவித்துக் கொண்டார்.

1778-ல் ஜார்ஜியாவில் சவன்னாவையும், 1780-ல் சார்லஸ்டவுனையும் ஆங்கிலப்படைகள் தளபதி கார்ன்வாலிசின் தலைமையில் கைப்பற்றின. ஆனால் தெற்கே இருந்த அமெரிக்கப் படைகளுக்கு தலைமை வகித்த நத்தானியேல் கிரின் (Nathanel Green) கார்ன்வாலிசின் படைகளுக்கு அதிக தொல்லை களை கொடுத்தார். இவர் வாஷிங்டனுக்கு அடுத்தபடியாக சிறந்த தளபதியாகக் கருதப்பட்டார். இவர் 1781, ஜனவரி 13-ல் கார்ன்வாலிசின் படைகளை கவ்பென்ஸ் (Cowpens) என்ற இடத்தில் தோற்கடித்தார். எனவே கார்ன்வாலிஸ் யார்க்டவுண் என்ற இடத்திற்குப் பின் வாங்கினார்.

இச்சமயத்தில் கார்ன்வாலிசை வெல்ல வாஷிங்டன் திட்டமிட்டார். வாஷிங்டனுக்கு பிரெஞ்சு தளபதி ரோச்சம்போ பக்கபலமாக இருந்தார். வாஷிங்டனும் ரோச்சாம்போவும் அமெரிக்கபிரெஞ்சுப்படைகளை நியுயார்க்கிலிருந்து அழைத்துக் கொண்டு வர்ஜினியாவில் நின்ற லபாயத்தின் படைகளுடன் இணைத்துக்கொண்டார். பிரெஞ்சு கடற்படை தளபதி கிரேஸி என்பவர் தனது கப்பல் படையுடன் செசாபீக் வளைகுடாவுக்கு சென்று யார்க்டவுணை முற்றுகையிட்டார். ஜார்ஜ் வாஷிங்டனின் இந்த ராணுவத்திட்டத்தினால் நிலத்திற்கும் கடலுக்கும் இடையில் கார்ன்வாலிஸ் சிக்கிக் கொண்டார். தப்பிக்க வழியில்லாமல் 1781, அக்டோபர் 17-ம் தேதி தனது ஏழாயிரம் படைவீரர்களுடன் சரணடைந்தார் கார்ன்வாலீஸ். இத்துடன் அமெரிக்க சுதந்திரப் போர் முடிவடைந்தது. இப்போரின் இறுதியில் செய்யப்பட்ட பாரிசு உடன்படிக்கையின்படி அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சுதந்திரத்தை இங்கிலாந்து அங்கீகரித்தது.

**பாரிசு உடன்படிக்கை : Treaty of Paris, 1783, Sep.3**

போரின் இறுதியில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் பாரிசில் துவங்கின. இதில் அமெரிக்காவின் சார்பில் பெஞ்சமின் பிராங்ளின், ஜாண்ஜே, ஜாண் ஆடம்ஸ் கலந்து கொண்டனர். இங்கிலாந்தின் சார்பில் அமைச்சர் ஷெல்பர்ன் (Shelburne) கலந்து கொண்டார். நீண்ட பேச்சு வார்த்தைக்குப் பின் 1783, செப், 3-ல்

உடன்படிக்கை கையெழுத்தானது. இந்த உடன்படிக்கையின் முக்கிய அம்சங்கள் வருமாறு :

1. அமெரிக்க ஐக்கிய நாடுகள் என்ற பெயரைக் கொண்ட பதின்மூன்று குடியேற்றங்களின் அரசியல் சுதந்திரத்தை இங்கிலாந்து அங்கீகரித்தது.

2. மேற்கில் மிசிசிப்பி நதி, வடக்கில் கனடா, தெற்கில் புளோரிடா ஆகியவற்றுக்கு இடைப்பட்ட பிரதேசங்கள் அனைத்தும் அமெரிக்காவுக்கு கொடுக்கப்பட்டன.

3. கனடா, நோவாஸ் கோஸியா, நியுபவுண்ட்லாந்து ஆகியவை இங்கிலாந்து வசமே விடப்பட்டன.

4. நியுபவுண்ட்லாந்து, நோவாஸ் கோஸியா தீவுகளின் கடலோரம் மீன்பிடிக்கும் உரிமை அமெரிக்கர்களுக்கு கொடுக்கப்பட்டது.

5. ஸ்பெயினுக்கு மைனார்க்காவும் புளோரிடாவும் கொடுக்கப்பட்டது.

6. போரின்போது அரச விசுவாசிகளிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகளையும் உடைமைகளையும் திருப்பி கொடுக்க மாநிலங்களைக் கேட்டுக் கொள்வதற்கு காங்கிரஸ் சம்மதித்தது. அரசவிசுவாசிகள் துன்புறுத்தப்படக்கூடாது.

7. ஆங்கிலேயர்கள் அமெரிக்க கடன்காரர்களிடமிருந்து கடனை வசூலிக்க எடுக்கும் முயற்சிகளுக்கு தடை விதிப்பதில்லை என்று காங்கிரஸ் உறுதியளித்தது.

8. மிசிசிப்பி நதியில் கப்பல் செலுத்தும் உரிமை ஆங்கிலேயருக்கும் அமெரிக்கர்களுக்கும் உண்டு என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## அமெரிக்கர்களின் வெற்றிக்கும் ஆங்கிலேயர்களின் தோல்விக்கும் காரணங்கள்

### 1. தூரம்

இங்கிலாந்து மூவாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து வந்து போரில் ஈடுபட வேண்டியதிருந்தது. விரைவான போக்குவரத்து வசதிகள் இல்லாத அக்காலத்தில் அட்லாண்டிக் பெருங்கடலைத் தாண்டி வந்து போர் புரிவது அவ்வளவு எளிதான காரியமாக இல்லை. எனவே குறித்த நேரத்தில் வீரர்களையும், படைக்கருவிகளையும் இங்கிலாந்தால் அனுப்ப முடியவில்லை. இதற்கு மாறாக அமெரிக்கர்கள் தங்கள் நிலத்திலேயே ஆங்கிலேயருடன் போர் புரிந்தனர். இதனால் தான் வெற்றி பெற முடிந்தது.

## 2. அமெரிக்காவின் புவிஇயல் அமைப்பு

அமெரிக்காவின் புவியியல் அமைப்பு பற்றிய அறிவு ஆங்கிலேயர்களுக்கு இல்லை. எனவே இவர்கள் பல இடர்பாடுகளைச் சந்தித்தனர். ஆனால் அமெரிக்கர்கள் தங்களுக்கு மிகவும் பழக்கமான நிலப்பரப்பில் போர் புரிந்ததால் எளிதாக வெற்றியடைய முடிந்தது.

## 3. திறமையற்ற இங்கிலாந்து படைத்தளபதிகள்

ஆங்கில தளகர்த்தர்களான தாமஸ் கேஜ், வில்லியம் ஹோவ் பர்கோயின், ஹென்றி கிளிண்டன் ஆகியோரிடம் போதிய அனுபவமோ, படைநுட்ப அறிவோ போர்த்திறமையோ இல்லை. இவர்கள் போர்களில் தீவிரமாகப் பணியாற்றவில்லை. இவர்கள் செய்த தவறுகளே அமெரிக்கர் வெற்றியடையக் காரணங்களாக அமைந்தன.

## 4. அமெரிக்கப் போர் வீரர்களின் விடுதலை உணர்வு

அமெரிக்கப் போர் வீரர்கள் தேசிய உணர்வுடனும், ஒற்றுமையுடனும், வீரத்துடனும் போரிட்டனர். ஆனால் ஆங்கில வீரர்கள் அரை குறை மனதுடனே போரிட்டனர். காரணம் அப்போது அமெரிக்காவில் இருந்தவர்கள் எல்லாம் இங்கிலாந்திலிருந்து வந்தவர்களே. எனவே ஆங்கிலேயர் தங்கள் சகோதர ஆங்கில மக்களை கொல்ல முன்வர வில்லை. மேலும் இங்கிலாந்துப் படையில் ஹெஸ்ஸியன்ஸ் (Hessians) என்ற கூலிப்படையினர் போரிட்டனர். இவர்கள் தேசிய உணர்வுடன் போரிட்ட அமெரிக்க வீரர்களுக்கு முன் நிற்க முடியவில்லை.

## 5. ஐரோப்பிய நாடுகளின் உதவி

ஐரோப்பாவில் இங்கிலாந்துடன் பகைமை கொண்ட பிரான்ஸ் 1763 க்குப் பிறகு அமெரிக்காவுக்கு மிகச்சிறந்த நட்புறவு நாடாக விளங்கியது. அமெரிக்க படை வீரர்களுக்குத் தேவையான வெடிமருந்து களையும், படைக்கருவிகளையும் அனுப்பியது. லாபயட், ரோஷம்போ ஆகியோர் தலைமையில் ராணுவவீரர்களை அனுப்பியது. கிராஸி என்பவர் தலைமையில் கப்பற்படையை அனுப்பியது. இவ்வாறு பிரெஞ்சுக்காரர்களின் உதவியுடன் அமெரிக்கர்கள் எளிதாக வெற்றி பெற்றன. மேலும் ஸ்பெயின், ரஷ்யா, ஹாலந்து, பிரஷ்யா ஆகிய நாடுகளும் அமெரிக்காவுக்கு உதவி செய்தன.

## 6. மூன்றாம் ஜார்ஜ் மன்னரின் பிடிவாதகுணம்

இங்கிலாந்து மன்னர் மூன்றாம் ஜார்ஜின் மூர்க்கத்தன மான எதேச்சதிகாரமான கொள்கைகளால் ஆங்கிலேயர் தோல்வி அடைந்தனர். இவர் தனது இஷ்டப்படி மந்திரி சபை களை

அடிக்கடி மாற்றியதால் தெளிவான, தொடர்ச்சியான கொள் கைகளைப் பின்பற்ற முடியவில்லை. மேலும் அமைச்சர் அவையில் ஒற்றுமை காணப்படவில்லை. அரசியல் தலைவர் களின் தர்க்க ரீதியான வாதங்களைப் புறக்கணித்து தனது விருப்பு வெறுப்பு களுக்கு முக்கியத்துவம் அளித்து உடன்பாட்டுக்கான வாய்ப்புகளை கொடுத்துவிட்டார்.

## 7. ஜார்ஜ் வாஷிங்டனின் தலைமை

அமெரிக்க சுதந்திரப் போரில் ஆங்கிலேயர்கள் தோற் பதற்கும், அமெரிக்கர்கள் வெற்றியடைவதற்கும் ஜார்ஜ் வாஷிங் டனின் தலைமை முக்கியக் காரணமாகும். இவர் நாட்டுப்பற்று, தெளிந்த அறிவு, துணிவு, பெருந்தன்மை ஆகிய பண்புகளைப் பெற்று சிறந்த படைத்தளபதியாக விளங்கினார். நெருக்கடியான நேரத்தில் மனம் தளரவில்லை. இத்தகைய தன்மைகளால் தான் முதலில் பல தோல்விகளைப் பெற்றாலும் இறுதியில் வெற்றி யடைந்தார்.

## அமெரிக்க சுதந்திரப் போரின் முக்கியத்துவம் : (விளைவுகள்)

அமெரிக்க சுதந்திரப்போர் கீழ்கண்ட பல காரணங் களினால் முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது.

1. சுதந்திரப் போரின் விளைவாக அமெரிக்க ஐக்கிய நாடுகள் என்ற புதிய நாடு உதயமானது. இந்தப்போர் விடுதலை என்ற உயர்ந்த லட்சியத்தினால் தூண்டப்பட்டதாகும். உலகத்தின் பல பகுதிகளில் ஏற்பட்ட சுதந்திரப் போராட்டங்களுக்கு உதவி செய்யும் வல்லமை பெற்றிருந்தது. 1789-ல் ஏற்பட்ட பிரெஞ்சுப் புரட்சிக்கும், லத்தீன் அமெரிக்க விடுதலைப் போராட்டங் களுக்கும் அமெரிக்க சுதந்திரப் போரே காரணமாகும்.

2. இப்போரின் விளைவாக அமெரிக்காவில் உலகத்தின் முதல் கூட்டாட்சி அரசாங்கம் அமைக்கப்பட்டது. உலக அரசியல் அறிஞர் களின் தத்துவங்கள் எல்லாம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. அவைகளின் அடிப்படையில் அமெரிக்காவில் உலகத்தின் முதலாவது எழுதப்பட்ட அரசியலமைப்பு உருவாக்கப் பட்டது.

3. சட்டத்திலும் கொள்கையிலும் மட்டுமல்லாமல் உண்மையாகவும், நடைமுறையிலும் ஒரு ஜனநாயக சமுதாயம் உருவாக அடிப்படையிட்டப்பட்டது. தனித்தனி நாடுகளாக இயங்கிக் கொண்டிருந்த பதின்மூன்று குடியேற்றங்களும் இணைந்து ஒரு தேசிய அரசு அமைக்கப்பட்டது. அமெரிக்க தேசியம் வளர்ச்சியடைந்தது.

4. அமெரிக்க சுதந்திரப்போர் இங்கிலாந்து அரசியலில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியது. ஆங்கிலேயரின் தோல்விக்குக் காரணமான மூன்றாம் ஜார்ஜ் மன்னர் மக்களின் மதிப்பை இழந்தார். இங்கிலாந்துக் குடியேற்றக் கொள்கையில் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டது. அமெரிக்க குடியேற்றங்களை இழந்த இங்கிலாந்து தனது கவனத்தை ஆசிய நாடுகளின் பக்கம் திருப்பியது. இந்தியாவில் குடியேற்றம் ஏற்படுத்துவதற்கு அதிக கவனம் செலுத்தியது.

5. அமெரிக்க சுதந்திரப் போரின் போது இங்கிலாந்துக்கு ஆதரவளித்த அரசவிசுவாசிகள் முக்கியமாக வட பகுதியிலிருந்த நிலக்கிழார்கள் இங்கிலாந்துடன் வாணிபம் செய்தவர்கள், அரசு ஊழியர்கள் போன்றவர்களே இங்கிலாந்துக்கு விசுவாசிகளாக இருந்தனர். போரின் முடிவில் இவர்களது செல்வாக்கும், ஆதிக்கமும் ஒழிந்தது. இவர்களது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. பலர் கைது செய்யப்பட்டனர். நாடு கடத்தப் பட்டனர். எனவே இவர்களில் சுமார் ஐம்பதாயிரம் பேர் கனடா, இங்கிலாந்து மற்றும் மேற்கிந்தியத் தீவுகளுக்குப் போய் குடியேறினர்.

6. சமயத்திலும் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டது. இதுவரை அமெரிக்க திருச்சபை இங்கிலாந்து திருச்சபையின் ஒரு கிளையாகவே செயல்பட்டது. போரின் இறுதியில் இந்த தொடர்பு அறுக்கப்பட்டது. மெத்தாடிஸ்ட், புராட்டஸ்தாந்து, எபிஸ்கோபல் திருச்சபை போன்றவை ஐரோப்பாவுடன் தங்களுக்கு இருந்த தொடர்பைத் துண்டித்துவிட்டு தனி நிறுவனங்களாக இயங்க ஆரம்பித்தன. சமயசுதந்திரம் அளிக்கப்பட்டு திருச்சபை சம்பந்தப் பட்ட வரிகள் ரத்து செய்யப்பட்டன.

7. அமெரிக்க மக்கள் தாங்கள் போராடி வரும் சுதந்திரக் கோட்பாடுகளுக்கு சற்றும் ஒவ்வாதது நீக்ரோ அடிமை முறை என்பதை உணர்ந்தனர். வடமாநிலங்களில் சட்டத்தின் மூலம் அடிமை முறை தவிர்க்கப்பட்டு வந்தது. சில மாநிலங்கள் புதிதாக அடிமைகளை கொண்டு வருவதைத் தடை செய்தன. சில மாநிலங்களில் அடிமை வியாபாரத்திற்கு அதிக வரி விதிக்கப் பட்டது. ஆனால் தென் மாநிலங்களில் அடிமை முறை அவசியம் தேவைப்பட்டது.

8. இறுதியாக, அமெரிக்க சுதந்திரப்போரில் அமெரிக்கர் பெற்ற வெற்றி பூர்வீக இந்தியக் குடிகளுக்கெதிராக அமைந்தது. போர் முடிவடைந்ததும் அமெரிக்கர்கள் கட்டுப்பாடுகள் இல் லாமல் மேற்கு நோக்கி குடிபெயர்ந்து இந்தியர்களின் நிலப் பரப்பை அபகரித்தனர். இதன விளைவாக இந்த இரு இனத்தவரும்

ஆயிரத்துக்கும் மேற்பட்ட போரில் ஈடுபட்டனர். முடிவில் பூர்வீக இந்தியர்களை ஒழித்துக்கட்டி விட்டு அவர்களின் பகுதிகளை யெல்லாம் தங்கள் உடமையாக்கிக் கொண்டனர் அமெரிக்கர்கள்.

இவ்வாறு அமெரிக்க சுதந்திரப்போர் பல வழிகளில் அமெரிக்க வரலாற்றிலும், உலக வரலாற்றிலும் முக்கியத்துவம் பெற்ற நிகழ்ச்சியாக உள்ளது.

# 6. நேசக் கூட்டாட்சி

## (Confedaration, 1781-1789)

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வரலாற்றில் சுதந்திரப் பிரகடனம் வெளியிடப்பட்ட நாளான 1776, ஜுலை 4-ம் தேதி முக்கியத்துவம் பெற்றுள்ளது. அதே அளவுக்கு முக்கியத்துவம் பெற்ற நாளாக கருதப்படுவது நேசக் கூட்டாட்சி விதிகள் நடைமுறைக்கு வந்த 1781, மார்ச் 1ம் தேதி ஆகும். ஏனெனில் அந்த நாள் அமெரிக்கர்கள் ஒற்றுமையுடனும், உரிமையுடனும் பதிமூன்று மாநிலங்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு அரசியலமைப்பை உருவாக்குவதில் வெற்றி பெற்ற நாளாகும். அதாவது அரசியல் உரிமைகளை அனுபவிப்பதற்குத் தாங்கள் தகுதியுடையவர்கள் தான் என்பதை அமெரிக்கர்கள் நிரூபித்து விட்டனர். அதன் மூலம் குடியாட்சி நிறுவனங்கள் சிறப்பாகச் செயல்பட முடியும் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டினர். கூட்டாட்சிக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட இந்த 'நேசக் கூட்டாட்சி விதிகளின்' படியே 1789-ஆண்டு வரை அமெரிக்க அரசு இயங்கியது.

### நேசக்கூட்டாட்சி விதிகள்: Articles of Confederation

அமெரிக்க மக்கள் தாங்கள் பெற்ற சுதந்திரத்தைப் பாதுகாத்துக்கொள்ளவும், பொருளாதார வாய்ப்புகளை விருத்தி செய்துகொள்ளவும், ஜனநாயக உரிமைகளைப் பேணவும் எடுக்கப்பட்ட முயற்சிகளின் ஆரம்ப கட்டமாக விளங்குவதே நேசக்கூட்டாட்சி விதிகள் ஆகும். ஒன்றுக்கொன்று எதிரான மாநில உரிமைகளையும் தேசிய ஒருமைப்பாட்டையும் கூட்டாட்சி என்றமைப்பில் ஒருங்கிணைப்பதில் அமெரிக்கர்கள் மகத்தான வெற்றி பெற்றனர். இதற்கு முக்கிய காரணம் அமெரிக்கர்களிடம் காணப்பட்ட மதிநுட்பமும், ஆழ்ந்த தொலைநோக்கும், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து பொதுநலன் பேணும் மனப் பான்மையுமே ஆகும். 1781, மார்ச் 1ம் தேதி நடைமுறைக்கு வந்த நேசக்கூட்டாட்சி விதிகள் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு முதல் அரசியல் அமைப்புச் சட்டத்தை அளித்தது.

# 7. கூட்டாட்சி அரசியலமைப்பு உருவாக்கப்படுதல்

## (Making of Federal Constitution, 1787-1789)

நேசக் கூட்டாட்சி விதிகளின்படி அமைக்கப்பட்ட மைய அரசு வலிமையற்றதாகவும், மாநிலங்களில் ஏற்பட்ட பிரச்சனைகளைத் தீர்க்க சக்தியற்றதாகவும் காணப்பட்டது. நாட்டில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார, அயலுறவு நெருக்கடிகள் நேசக்கூட்டாட்சியின் விதிகளை செயலற்ற தாக்கியதுடன் கூட்டமைப்பையே அழித்துவிடும் நிலையை ஏற்படுத்தியது. எனவே இந்த விதிகளை மாற்றியமைத்து உறுதியான ஒரு அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் ஆட்சிப்பொறுப்பிலிருந்த அனைவரின் மனத்திலும் உருவானது. அதற்கான சூழ்நிலையும் காணப்பட்டது. எனவே புதிய அரசியல் மைப்பை உருவாக்கு வதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப் பட்டன. அதன் விளைவாக புதிய, வலிமையான ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பு வரையப்பட்டு 1789-ம் ஆண்டு மார்ச் 4-ம்தேதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதுவே உலகத்தின் முதலாவது எழுதப்பட்ட கூட்டாட்சி அரசியலமைப்பாகும்.

## புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படக் காரணமான சூழ்நிலைகள்

a) உள்நாட்டுப் பிரச்சனைகளைத் தீர்த்து வெளிநாடுகளில் தனது செல்வாக்கை நிலைநாட்டக்கூடிய வலிமையான தேசிய அரசு அமையவேண்டும் என்ற எண்ணம் எல்லோர் மனதிலும் தோன்றியது. குழப்பமான நிலை தொடர்ந்து நிலவினால் அந்நிய நாடுகள் மீண்டும் தங்கள் நாட்டைக் கைப்பற்றிவிடும் என்ற அச்சம் காணப்பட்டது. மேலும் இச்சூழ்நிலையில் யாரேனும் ஒரு சர்வாதிகாரி தோன்றி விடலாம் என்ற பய உணர்வும் மக்களிடையே நிலவியது.

b) ஜார்ஜ் வாஷிங்டன், அலக்சாண்டர் ஹாமில்டன் போன்ற மக்களிடம் செல்வாக்குப் பெற்ற தலைவர்கள் ஐக்கியக் கொள்கையின் அடிப்படையில் புதிய அரசியல் சட்டம் வரையப் பட வேண்டும் என்பதை வற்புறுத்தினார்கள். வலிமை வாய்ந்த சில நிறுவனங்களும் ஒரு வலிமை வாய்ந்த தேசிய அரசு உருவாக உழைத்தன.

c) அமெரிக்க சுதந்திரப் போரின் போது ஊதியத்திற்குப் பதிலாக கடன்பத்திரங்களைப் (Bonds) பெற்றுக் கொண்ட ராணுவ வீரர்கள், மற்றும் நிலச்சுவான்தார்கள், வணிகர்கள் ஆகியோர் தங்கள் கடனைத் திரும்பப் பெறுவதற்கு வழிவகுக்கும் உரிமை கொண்ட ஓர் மைய அரசை நிறுவ விரும்பினர்.

d) மாநிலங்களுக்கிடையே ஏற்பட்ட பிரச்சனைகளினால் உள்நாட்டுப் போர் ஏற்படும் அபாயமும், நேசக் கூட்டாட்சியிலிருந்து பிரிந்து செல்லும் எண்ணமும் சில மாநிலங்களில் காணப்பட்டது.

இச்சூழ்நிலைகளால்தான் அமெரிக்காவில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது.

## அரசியலமைப்புச் சட்ட மாநாடு : Constitutional Convention

### a) அன்னா பொலிஸ் மாநாடு : 1786, செப்டம்பர்.

வர்ஜினியாவுக்கும் மேரிலாந்துக்கும் இடையே பொட்டாமக் மற்றும் செசாபீக்குடாவில் கப்பல்விடும் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக 1786-ல் ஜார்ஜ் வாஷிங்டன் தன் இருப்பிடமான மவுண்ட் வெர்னான் என்ற இடத்தில் அவற்றின் பிரதிநிதிகளை அழைத்துப் பேசினார். செசாபீக் பிரச்சனை தீர்க்கப்படவேண்டுமானால் மற்ற மாநிலங்களின் பிரதிநிதிகளும் தேவை என்று கருதினார். எனவே 1786-ல் செப்டம்பர் மாதம் அன்னாபொலிஸ் என்ற நகரில் எல்லா மாநிலங்களின் பிரதிநிதிகளையும் கொண்ட மாநாடு கூட்ட முடிவு செய்யப்பட்டது.

ஆனால் ஐந்து மாநிலங்களின் பிரதிநிதிகள் மட்டுமே வந்தனர். இந்த அன்னாபொலிஸ் மாநாட்டில் நேசக்கூட்டாட்சி விதிகளில் திருத்தம் செய்து மைய அரசினை வலுப்படுத்த வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அதற்காக அரசியலமைப்புச்சட்ட மாநாடு ஒன்றைக் கூட்டுமாறு காங்கிரசைக் கேட்டுக் கொண்டனர்.

### b) பிலடெல்பியா மாநாடு : மே 1787

நேசக் கூட்டாட்சி விதிகளைத் திருத்தியமைப்பதற் காகவே பிலடெல்பியாவில் உள்ள ஸ்டேட் ஹவுசில் 1787, மே மாதம் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. இதில் ரோடுஐலந்து தவிர மற்ற மாநிலங்களிலிருந்து மொத்தம் 55 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இந்த பிரதிநிதிகள் எல்லாம் கூடிப்பேசிய போதுதான் திருத்தங்கள் மட்டுமல்லாது ஒரு புதிய அரசியலமைப்பையே உருவாக்க முடிவு செய்யப்பட்டது.

இந்த அரசியலமைப்பு சட்ட மாநாட்டில் கலந்து கொண்ட முக்கியமான தலைவர்கள் வருவாறு: பெஞ்சமன் பிராங்ளின், அலக்சாண்டர் ஹாமில்டன், வில்லியம் பேட்டர்சன், ஜேம்ஸ் மாடிசன், எட்மண்ட் ரண்டால்ப், ஜான்டிக்கன்சன், ஜார்ஜ் வாஷிங்டன் ஆகியோர் ஆவர். இந்த மாநாட்டின் தலைவ ராக ஜார்ஜ் வாஷிங்டன் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த மாநாடு 1787, மே மாதம் முதல் செப்டம்பர் வரை நடைபெற்றது. இந்த அரசியலமைப்புச் சட்ட மாநாட்டின் முக்கிய நோக்கம் 'நேசக் கூட்டாட்சி விதிகளில்' காணப்பட்ட அரசியல் சட்ட ஏற்பாட்டி னைக் திருத்தியமைத்து, சீர்திருத்தம் செய்து செப்பனிடுதலே ஆகும். ஆனால் சிறிது சிறிதாக இந்த மாநாடு ஒரு புதிய அரசியல் சட்டத்தை உருவாக்கும் பணிகளை மேற்கொண்டது. மாநாட்டு நடவடிக்கைகள் எல்லாம் ரகசியமாக வைத்துக் கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது.

வரிவசூலித்து, வாணிபத்தையும் தனியார் சொத்துக் களையும் காத்து, நாணயங்கள் அச்சிட்டு, கலகங்களை ஒடுக்கி, வலிமையோடு ஆளக்கூடிய மைய அரசு ஒன்றை அமைக்க வேண்டும் என்று அவர்கள் முடிவு செய்தனர். ஜேம்ஸ் மாடிசன் **(James Madison)** என்ற வர்ஜினியாவின் பிரதிநிதி இந்தப் பொறுப்பை ஏற்று அரசியலமைப்பை வரைந்தார். எனவே அவர் 'அரசியலமைப்பின் தந்தை' என்று கருதப் படுகிறார்.

### வர்ஜினியா திட்டம் : Virginia Plan

அரசியலமைப்புச் சட்ட மாநாடு 1787, மே 23-ல் விவாதத்திற்கு அமர்ந்தபோது வர்ஜினியா பிரதிநிதிகளின் சார்பாக எட்மண்ட் ராண்டால்ப் **(Edmund Randalph)** என்பவர் புதிய

கூட்டாட்சி அரசியலமைப்புக்கான அடிப்படைக் கருத்துக்களை தீர்மானங் களாகச் சமர்பித்தார். இதுவே 'வர்ஜினியா திட்டம்' எனப்படுகிறது.

வர்ஜினியா திட்டம் பெரிய மாநிலங்களின் விருப்பமாக அமைந்தது. இந்தத்திட்டத்தின் சாராம்சம் வருமாறு: இரு சட்ட மன்றங்களைக் கொண்ட காங்கிரஸ் அமைக்கப்பட வேண்டும். இவை களில் மக்கள்தொகை அடிப்படையில் பிரதிநிதித்துவம் உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுதல், மேல் சபை உறுப்பினர்கள் கீழ் சபையால் தேர்ந்தெடுக்கப்படுதல் ஆகிய கருத்துக்கள் காணப்பட்டன. நாட்டின் நிர்வாகத்தலைவர் காங்கிரசால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். மாநில சட்ட மன்றங்கள் இயற்றிய சட்டங்களை பரிசீலனை செய்ய தனிக்குழு அமைக்கப்பட வேண்டும் ஆகிய கருத்துக்கள் இடம் பெற்றன.

## நியு ஜெர்சி திட்டம் : New Jersy Plan

இந்த வர்ஜினியா திட்டத்திற்கு எதிராக நியுஜெர்சியைச் சேர்ந்த வில்லியம் பேட்டர்சன் மற்றொரு திட்டத்தை சமர்ப்பித்தார். இது சிறிய மாநிலங்களின் விருப்பத்தின்படி அமைந்த திட்டமாகும். அதன் சாராம்சம்:

"ஒரு சபையைக் கொண்ட காங்கிரஸ் அமைக்கப்பட வேண்டும். அதில் அனைத்து மாநிலங்களுக்கும் சம அளவில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும். நாட்டின் தலைமை ஒரு நிர்வாகக் குழுவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். தேசிய நீதித்துறை உருவாக்கப்பட வேண்டும். மைய அரசின் சட்டங் களுக்கு மாநிலங்கள் கட்டுப்பட வேண்டும்".

இவை தவிர ஹேமில்டன் திட்டம், பின்க்னேதிட்டம் போன்றவையும் சமர்பிக்கப்பட்டன. மேலும் நீக்ரோ அடிமை களைக் கொண்ட தென்மாநிலங்கள் தங்கள் சிறப்புத் தன்மை களைப் பாதுகாக்க விரும்பின. கீழ்சபையில் மக்கள்தொகை அடிப்படையில் மாநிலங்களுக்கு இடம் ஒதுக்கும் போது நீக்ரோக்களும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்பது வற்புறுத்தப்பட்டது. ஆனால் வடமாநிலங்கள் இதனை எதிர்த்தன.

## பெரும் சமரசம் : Great Compromise

இப்படி பலவகைப்பட்ட கருத்துக்கள் அரசியலமைப்பு சட்ட மாநாட்டில் சமர்பிக்கப்பட்டதால் கருத்து வேற்றுமை நிலவியது. சமரசப் பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய திட்டம் ஒன்றை கனக்டிகட் பிரதிநிதி ரோஜர் ஷெர்மன் சமர்ப்பித்தார். இதுவே பெரும் சமரசம் என்று

அழைக்கப்படுகிறது.

இந்த சமரசத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு: கீழ்சபையில் மக்கள்தொகைக்கேற்ப மாநிலங்களுக்குப் பிரதிநிதித்துவம், மேல்சபையில் சம அளவிலான பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டும். மக்கள் தொகை கணக்கெடுப்பில் நீக்ரோக்களில் ஐந்தில் மூன்று பகுதியினர் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அடிமை இறக்குமதி மேலும் இருபது ஆண்டுகளுக்கு அனுமதிக்கப்பட்டது. எல்லா ஒப்பந்தங்களும் மேல் சபையிலும் மூன்றில் இருபங்கு பெரும்பான்மையுடன் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

## அரசியலமைப்பு கையெழுத்திடப்படுதல்

இவ்வாறு 1787, ஜூன் 19-முதல் ஜூலை 26 வரை விவாதங்கள் நடந்து முடிந்தது. அதன்பிறகு எல்லாக் கருத்துக் களையும் திரட்டி அதனை வரைவதற்கு ஒரு குழு அமைக்கப் பட்டது. அதற்கு **Committee of Style** என்று பெயர். அக்குழு உறுப்பினர்களில் கோவர்னோர் மோரிஸ் (**Gouverneur Morris**) என்பவர் நல்ல தெளிவான வார்த்தைகளை உபயோகித்து, அழகிய மொழியில் அரசியலமைப்பை எழுதினார். இவ்வாறு எழுதப்பட்ட அரசியலமைப்பு வரைவு மாநாட்டு பிரதிநிதி களின் ஒப்புதல் பெற 1787 செப்டம்பரில் சமர்ப்பிக்கப்பட்டது.

அரசியலமைப்பு வரைவு சபையில் சமர்பிக்கப்பட்ட போது வெறுப்பில் பல உறுப்பினர்கள் வரவில்லை. ஜார்ஜ் மேசன், எட்மண்ட் ரண்டால்ப், எல்பிரிட்ஜ் ஜெர்ரி போன்றோர் கையெழுத்திட மறுததார்கள். ஆனாலும் இறுதியில் முதலில் கூடிய 55 பேரில் 12 மாநிலங்களைச் சேர்ந்த 39 பேர் கையெழுத்திட்டனர். அதன் பிறகு மாநிலங்களின் ஒப்புதலைப் பெறுவதற்காக உறுப்பினர்கள் கலைந்து சென்றனர்.

## மாநிலங்களின் ஒப்புதல் பெறப்படுதல் : Ratification

## அரசியலமைப்புக்கு எதிர்ப்பும், ஆதரவும்

புதிதாக உருவாக்கப்பட்ட அரசியலமைப்புக்கு கடுமை யான எதிர்ப்பு ஏற்பட்டது. பேட்ரிக் ஹென்றி, ஜார்ஜ் கிளிண்டன் போன்றோர் 'அரசியலமைப்பில் சிறுகுடியானவர்கள், வியாபாரி கள் போன்ற சாதாரணமக்களின் நலன்கள் புறக்கணிக் கப்பட்டு விட்டன' என்று குறை கூறினர். மைய அரசைச் சார்ந்தே மாநில அரசுகளிருக்குமாறு செய்யப்பட்டது தவறு என்றனர். மனித உரிமைகளை ஒதுக்கிவிட்டு சொத்து உரிமைக்கு முக்கியத்துவம் தந்தது. தவறு என்றும், பணக்காரப் பிரதிநிதிகளால் ரகசியமாக

வரையப்பட்டது என்றும், தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். இவ்வாறு கூட்டாட்சி அரசியல் அமைப்பை எதிர்த்தவர் 'கூட்டாட்சி எதிர்ப்பாளர்கள்' (Anti-Federalists) என்று அழைக்கப் பட்டனர்.

ஆனால் ஜார்ஜ் வாஷிங்டன், அலக்சாந்தர் ஹாமில்டன், மாடிசன் ஜான்ஜே போன்றோர் கூட்டாட்சி அரசியலமைப்பை ஆதரித்தனர். இவர்கள் 'கூட்டாட்சி வாதிகள்' (Federalists) என்று அழைக்கப்பட்டனர். அரசியலமைப்பின் தன்மைகளையும், சிறப்பு களையும் ஹாமில்டன், மாடிசன், ஜேமஸ் மாடிசன் ஆகியோர் நியுயார்க் செய்தித்தாள் களில் எழுதினர். அரசியலமைப்பை விளக்கி இவர்கள் எழுதிய கட்டுரைகள் The Fedaralist Papers என்ற பெயரில் நூல்வடிவில் வெளிவந்தது. இது தலைசிறந்த அமெரிக்க அரசியல் நூலாக விளங்குகிறது.

## மாநிலங்களின் ஒப்புதல்

ஒவ்வொரு மாநிலத்திலும் தேர்தல் மூலம் மக்கள் மன்றங் களைக் (Popular Convention) கூட்டி புதிய அரசியலமைப்புக்கு ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. ஆனால் முக்கால் வாக்காளர்கள் தேர்தலில் வாக்களிக்க வரவே இல்லை. உரிமைப்பட்டயம் ஒன்றை பின்னர் அரசியல மைப்பில் சேர்த்து விடுவதாக கூட்டாட்சியாளர்கள் உறுதியளித்த பின்னரே அரசியலமைப்பிற்கு ஆதரவாக வாக்களிக்க எதிர்ப் பாளர்கள் இணங்கினர். இந்த செயற்பாடு களால் எல்லா மாநிலங்களும் திருப்தி அடைந்தன. 1788, ஜுன் 21-க்குள் பதிமூன்று மாநிலங்களாலும் அரசியலமைப்புச்சட்டம் ஏற்றுக் கொள்ளப் பட்டது. 1789, மார்ச் 4-ம் தேதி முதல் நடைமுறைக்கு வந்தது. இந்த அரசியலமைப்பு சுருக்க மானதும், தெளிவானதும் ஆகும். கூட்டாட்சி அரசியலமைப்புக்கு அது ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

## புதிய கூட்டாட்சி அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகள்

### 1. எழுதப்பட்ட, நெகிழா அரசியலமைப்பு

அமெரிக்க அரசியலமைப்பு எழுதப்பட்டதும், நெகிழாத துமான அரசியலமைப்பாகும். இது சுருக்கமாகவும், தெளிவாகவும் எழுதப்பட்டுள்ளது. ஏறத்தாழ நாலாயிரம் வார்த்தைகளைக் கொண்டது. மேலும் இந்த அரசியலமைப்பு நெகிழாத்தன்மை கொண்டது. இந்த அரசியலமைப்பை எளிதில் மாற்றமுடியாது. அரசியலமைப்பைத் திருத்த கடினமான முறை பின்பற்றப்படுகிறது. நான்கில் மூன்று பங்கு மாநிலங்களின் ஒப்புதல் பெற்றபின் திருத்தம் நடைமுறைக்கு வரும். இதுவரை 26 திருத்தங்கள் மட்டுமே

செய்யப்பட்டுள்ளன.

## 2. கூட்டாட்சி அரசியலமைப்பு

அமெரிக்க அரசியலமைப்பு கூட்டாட்சியின் சிறப்புத் தன்மைகள் அனைத்தையும் ஒருங்கே பெற்றுள்ளது. உலகத்தில் முதன் முதலாக நிறுவப்பட்டது. அமெரிக்கக் கூட்டாட்சியே ஆகும். கூட்டாட்சிகருத்துக்களான அரசியலமைப்பின் மேன்மை, அதிகாரப் பங்கீடு, நீதித்துறையின் சுதந்திரம் ஆகிய அனைத்துப் பண்புகளும் இந்த அரசியலமைப்பில் காணப்படுகிறது.

## 3. தலைவர் முறை அரசு

அமெரிக்க அரசியலமைப்பு தலைவர் முறை அரசாங்கத்தை அமைத்துள்ளது. குடியரசுத் தலைவர் மக்களால் தேர்ந்தெடுக் கப்பட்ட 'தேர்வாளர் குழுவினால்' (Electoral College) நான்கு ஆண்டு காலத்திற்குத் தேர்ந்தெடுககப்படுவார். அரசியல் அமைப்பின்படி மறைமுகமாகவும், நடைமுறையில் நேரடியாகவும் இவ்வாறு தேர்ந்தெடுக்கப் படுகிறார். இவரே நாட்டின் நிர்வாகத் தலைவர் ஆகும்.

## 4. காங்கிரஸ்

தேசிய சட்டமன்றமான காங்கிரஸ் இரு சபைகளைக் கொண்டதாகும். மேல்சபை செனட் என்றும் கீழ்சபை பிரதிநிதிகள் சபை என்றும் அழைக்கப்படுகிறது. சிறிது பெரிது வேறுபாடு இல்லாமல் ஒவ்வொரு மாநிலமும் இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து செனட் சபைக்கு அனுப்பும். இந்த உறுப்பினர்களின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகள். கீழ்சபை பிரதிநிதிகள் சபை என்று அழைக்கப்படுகிறது. இதன் உறுப்பினர்கள் இரண்டு ஆண்டு காலத்துக்கு மக்கள் தொகையின் அடிப்படையில் மாநில வாக் காளர்களால் தேர்ந்தெடுக்கப்படு கின்றனர்.

## 5. நீதித்துறை

அரசியலமைப்பின் கீழ் எல்லா வழக்குகளையும் விசாரிக்கும் அதிகாரத்துடன் தலைமை நீதிமன்றம் உருவாக்கப் பட்டது. தேவையான கீழ் நீதிமன்றங்களை காங்கிரஸ் அமைத்துக் கொள் ளலாம். கீழ் நீதிமன்றங்களிலிருந்து தலைமை நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்து கொள்ளலாம். நீதிப் புனராய்வு அமெரிக்க அரசியலமைப்பின் சிறந்த அம்சமாகும். அரசியலமைப்புக்கு முரணான சட்டங்களை செல்லாது என்று தலைமை நீதிமன்றம் கூறும் அதிகாரமே நீதிப்புனராய்வு ஆகும்.

## 7. அதிகாரப்பிரிவினைக் கோட்பாடு

அமெரிக்க அரசியலமைப்பு அதிகாரப் பிரிவினைக்

கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது ஆகும். சட்டம் இயற்றும் அதிகாரம், நிர்வாக அதிகாரம், நீதித்துறை அதிகாரம் ஆகியவை தெளிவாக வரையறை செய்யப்பட்டுள்ளது.

### 8. சமநிலை தடைக் கோட்பாடு

அதிகாரப் பிரிவினைக் கொள்கையின் மூலம் மக்களின் உரிமைகள் பறிக்கப்படாமல் இருப்பதற்கும் அரசின் மூன்று முக்கிய துறைகளான சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை ஆகிய ஒவ்வொரு துறையும் மற்ற துறைகளின் மீது அத்துமீறி நடக்காமல் தடை செய்யவும் சமநிலைத் தடைகள் அமெரிக்க அரசியலமைப்பில் காணப்படுகிறது. இது குறிப்பிடத்தக்க சிறப்புத் தன்மையாகும்.

### 9. அதிகாரப் பங்கீடு

கூட்டாட்சி அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே அதிகாரங்கள் தெளிவாகப் பங்கீடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பிடப்படாத எஞ்சிய அதிகாரங்கள் அனைத்தும் மாநிலங் களுக்கு ஒதுக்கப் பட்டுள்ளன. இது அமெரிக்க அரசியலமைப்பின் சிறப்பம்சமாகும்.

### 10. மக்களின் இறைமைத் தன்மை

அமெரிக்க அரசியலமைப்பு மக்களின் அரசியலமைப்பு ஆகும். மக்களின் இறைமைத்தன்மை மதிக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் ஆரம்பமே 'ஐக்கிய நாடுகளின் மக்களாகிய நாம்' என்று தான் ஆரம்பிக்கிறது. மேலும் சட்டத்தின் முன் யாவரும் சமம் என்ற கோட்பாடும் வலியுறுத்தப்படுகிறது. மேலும் ஒரு கட்டுப்பாடுடைய அரசாங்கத்தை அமைக்க அமெரிக்க அரசியலமைப்பு வழிசெய்துள்ளது. மக்களின் உரிமை புனிதமானது என்ற கொள்கையை வலியுறுத்து வதாக அமெரிக்க அரசியலமைப்பு அமைந்துள்ளது.

## 8. ஜார்ஜ் வாஷிங்டன்

### (George washington, 1789-1797)

அமெரிக்க ஐக்கிய நாடுகள் என்ற சுதந்திர ஜனநாயக நாட்டை நிறுவியதில் ஜார்ஜ் வாஷிங்டன் முதன்மையான இடம்பெறுகிறார். இதனால்தான் 'அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தந்தை' என்று போற்றப்படுகிறார். இவர் அமெரிக்க சுதந்திரப் போராட்டத்தில் ராணுவத் தலைவராகி விடாமுயற்சியுடன்

போரை நடத்தி வெற்றி வாகை சூடினார். விடுதலைப் போர் முடிந்த பிறகு அமெரிக்காவின் அரசியலமைப்பை உருவாக்கி அதனை எல்லா மாநிலங்களையும் ஏற்கச் செய்வதில் வெற்றி அடைந்தார்.

பின்னர் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முதலாவது குடியரசுத் தலைவராக எட்டு ஆண்டுகள் பணியாற்றி, நாடு சிதருண்டு போகாமல் அதன் ஒற்றுமையைப் பாதுகாத்தனர். மக்களாட்சி முறையின் அடிப்படையில் ஒரு புதிய அரசாங்கத்தை அமைத்து வெற்றி பெற்றார். நாட்டிற்கான சிறந்த வெளிநாட்டுக் கொள்கையை வகுத்துக் கொடுத்தார். அஞ்சா நெஞ்சமுடைய ஜார்ஜ் வாஷிங்டன் சிறந்த நிர்வாகத் திறமையுடையவராகவும், மன உறுதி படைத்தவராகவும் எல்லாவற்றிற்கும் மேலாக ஒழுக்க சீலராகவும் விளங்கினார்.

## வாழ்க்கைக்குறிப்பு :


ஜார்ஜ் வாஷிங்டன் வர்ஜினியாவில் உள்ள வேக்பீல்ட் என்ற ஊரில் 1732-ல் பிறந்தார். இவரது தந்தை ஒரு பணக்கார தோட்ட முதலாளி. தனது இருபதாம் வயதிலேயே ஒரு பெரிய பண்ணைச் சொத்தினை மரபுரிமையாகப் பெற்றார். இவர் 1753 முதல் 1758 வரையில் ராணுவத்தில் பணியாற்றினார். பிரெஞ்சுப் போரிலும் செவ்விந்தியப் போரிலும் தீவிரமாகப் பணியாற்றினார். இதனால் நல்ல ராணுவ அனுபவம் கிடைத்தது. 1758-ம் வருட இறுதியில் வர்ஜினியாவுக்குத் திரும்பினார். சிறிது காலத்தில் இரண்டு குழந்தைகளுக்குத் தாயாக இருந்த மார்த்தா டாண்டிரிட்ஜ் கஸ்டிஸ் என்ற பணக்கார விதவையைத் திருமணம் செய்து கொண்டார். வாஷிங்டனுக்கு குழந்தையேதும் பிறக்கவில்லை.

அடுத்த 15 ஆண்டுக்காலம் தனது பண்ணையில் கழித்தார். 1774-ல் முதலாவது பிலடெல்பியா காங்கிரசுக்கு வர்ஜினியாவின் பிரதிநிதியாகப் பங்கேற்றார். 1775-ஜூனில் நடைபெற்ற இரண்டாவது காங்கிரஸ் இவரை அமெரிக்கபுரட்சிராணுவத்தின் தலைமைத் தளபதியாகத் தேர்ந்தெடுத்தது. சுதந்திரப் போரில் சிறந்த மனஉறுதி படைத்தவராகப் போரிட்டு வெற்றிபெற்றார். சுதந்திரப்போர் நடைபெற்ற காலம் முழுவதும் இவர் ஊதியம் பெறாமலேயே பணியாற்றினார். பின்னர் அமெரிக்காவின் குடியர சுத்தலைவராக 1789-97 வரை பணி ஆற்றினார். பல சாதனைகள் புரிந்தார். 1799 டிசம்பர் மாதம் தனது இருப்பிடமான வெர்னான் குன்றில் (Mount Vernon) காலமானார்.

## குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுதல்: 1789, ஏப்ரல் 30

1789-ல் நியுயார்க் தற்காலிகத் தலைநகராக உருவாகிக்

கொண்டிருந்தது. அங்குள்ள வால் தெருவில் தான் நாட்டின் முதல் தலைமை செயலகமான பெடரல்ஹால் (Federal Hall) இடம் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். புதிய அரசியலமைப்பின்படி குடியரசுத்தலைவரையும் காங்கிரஸின் உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. குடியரசுத் தலைவர் யார் என்பது பற்றி யாருக்கும் சந்தேகம் இல்லை. அனைவரும் ஒரே பெயரைத்தான் நினைத்தார்கள். அந்தப் பெயர் ஜார்ஜ் வாஷிங்டன். அமெரிக்க வரலாற்றில் போட்டி இல்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே குடியரசுத் தலைவர் ஜார்ஜ்



**ஜார்ஜ் வாஷிங்டன்**

வாஷிங்டன் ஆவார். துணைக் குடியரசுத் தலைவராக ஜான் ஆடம்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## பதவி ஏற்பு

நியுயார்க் நகருக்குச் சென்று பதவி ஏற்பதற்காக படோமக் நதிக்கரையிலுள்ள தமது அழகிய தோட்டத்திலிருந்து புறப்பட்டார் ஜார்ஜ் வாஷிங்டன். எளிமையும், அழகும் கலந்த உள்ளத்தை உலுக்கும் உணர்ச்சிமயமான அந்த ஊர்வலம் அமெரிக்க வரலாற்றின் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்று ஆகும். 1789, ஏப்ரல் 30-ம் தேதி நியுயார்க் நகரிலுள்ள வால் தெருவில் அமைந்த பிரமாண்டமான கூட்டத்தின் முன்பு பைபிளின் மேல் கை வைத்து விசுவாசம் பிரமாணம் எடுத்துக் கொண்டார். அப்போது நியுயார்க் சான்சலர் மக்களைப் பார்த்து 'ஐக்கிய நாடுகளின் குடியரசுத் தலைவராகிய ஜார்ஜ்வாஷிங்டன் நீடுழி வாழ்க' என்று கோஷமிட்டார். கூட்டத்தினர் இடி முழக்கம் போன்று ஆரவாரம் செய்தனர்.


## வாஷிங்டனின் உள்நாட்டுக் கொள்கை

### 1) வாஷிங்டனின் கீழ் புதிய அரசாங்கம் அமைப்பு

ஜார்ஜ் வாஷிங்டன் பெரிய அரசியல் நிபுணர் அல்ல. அரசாங்க நிர்வாக நுணுக்கங்களும் அவ்வளவாகத் தெரியாது. பேச்சிலும் வல்லவர் அல்ல. ஆனாலும் மக்கள் அவரிடம் கீழ்படிந்தனர். பயபக்தி கொண்டனர். தேச ஐக்கியம் என்ற கருத்தின் மொத்த உருவமாகவே அவரைப் பார்த்தனர். அவருடைய நியாய உணர்வு, பரந்த நோக்கு, தெள்ளறிவு ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டார்கள். ஜார்ஜ் வாஷிங்டன் தேசிய லட்சியத்தின் பிரதிநிதியாகவே இருக்க முயன்றார். கூட்டாட்சி தத்துவத்தில் பற்றிருந்தும் கட்சி மனப்பான்மை அற்றவராக இருந்தார். எப்பொழுதும் விழிப்பும் உழைப்பும் கொண்ட அவர் திட்டமிட்டபடி வெகுநேரம் வேலை செய்வார். "ஐக்கியமாக வாழுங்கள்; அமெரிக்கராக வாழுங்கள்" என்ற உபதேசத்தை மக்கள் மனதில் பதிய வைக்கப் பாடுபட்டார். அதில் வெற்றியும் அடைந்தார்.

### 2) புதிய நியமனங்கள்

வாஷிங்டன் பதவி ஏற்ற போது மைய அரசாங்கத் துறைகள் என்று எதுவும் இல்லை. ஒரு புதிய அரசாங்க அமைப்பை உருவாக்கும் பொறுப்பு வாஷிங்டனுக்கு இருந்தது. 1789, ஏப்ரல் 1-ல் பிரதிநிதிகள் சபை செயல்படத் தொடங்கியது. பென்சில்வேனியாச்



பெடரல் ஹால்

சேர்ந்த பிரடரிக் மெகலன் பர்க் (Frederick Mehlenburg) அதன் முதலாவது சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஏப்ரல் 6-ம் தேதி செனட் செயல்பட ஆரம்பித்தது. செனட் சபையை நடத்தும் அதிகாரியாக ஜான் ஆடம்ஸ் பொறுப்பேற்றுக் கொண்டார். காங்கிரஸ் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்தது. உறுப்பினர்களுக்கு கூட்டம் நடக்கும் காலத்தில் ஒரு நாளைக்கு ஆறு டாலர் சம்பளம் என்று நிர்ணயிக்கப்பட்டது. குடியரசுத் தலைவருக்கு வருடத்திற்கு 25,000 டாலர் என்று நிர்ணயிக்கப்பட்டது. வெளிஉறவுத்துறை, போர்த்துறை, கருவூலத்துறை, தபால் துறை ஆகிய துறைகள் உருவாக்கப்பட்டன.

மேற்கண்ட இந்த நான்கு துறைகளுக்கும் திறமையான, மக்களிடம் நல்லபெயர் எடுத்த, நாட்டுப்பற்று கொண்டவர்களையே வாஷிங்டன் நியமித்தார். வெளிநாட்டு உறவுத்துறை செயலராக தாமஸ் ஜெபர்சன், போர்த்துறைக்கு ஹென்றி நாக்ஸ் (Henry Knox) கருவூலத்துறைக்கு அலக்சாந்தர் ஹாமில்டன், தபால் துறைக்கு சாமுவேல் ஆஸ்கட் (Samuel Osgood) ஆகியோரை நியமித்தார். அட்டர்னி ஜெனரலாக எட்மண்ட் ரண்டால்ப் நியமிக்கப்பட்டார். அமெரிக்காவின் முதல் மந்திரி சபை இதுவே ஆகும். அமெரிக்க அரசியலமைப்பில் அமைச்சரவை பற்றி எதுவும் கூறப்படவில்லை என்றாலும் இந்தத்துறைகளின் தலைவர்கள் கூட்டம் மந்திரி சபை போன்றே இன்று வரை செயல்பட்டு வருகிறது.

## 3) அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் சேர்க்கப்படுதல் Bill of rights

அமெரிக்க அரசியலமைப்பு மாநிலங்களின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்ட போது ஐந்து மாநிலங்கள் மறுத்தன. மக்களின் அடிப்படை உரிமைகள் பற்றிய பிரிவு அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டால்தான் ஒப்புதல் தரமுடியும் என்று கோரிக்கை வைத்தன. அதனை தேசியத் தலைவர்கள் ஏற்றுக் கொள்வதாக வாக்குறுதி யளித்த பின்னரே ஒப்புதல் கொடுத்தன.

அதன்படி 1789-ல் மாடிசன் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அவர் அடிப்படை உரிமைகள் கொண்ட பட்டியல் ஒன்றை தயார் செய்தார். அது பன்னிரண்டு அரசியல் அமைப்புத் திருத்தங்களாக காங்கிரசில் அறிமுகம் செய்யப்பட்டது. அவற்றில் பத்து திருத்தங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்பட்டு 1791-ல் அவை சட்டமாயின. உரிமைகள் மசோதா என்று அழைக்கப்படும் இந்த பட்டியலில் பேச்சுரிமை, எழுத்துரிமை, சமய உரிமை, சட்ட உரிமை, ஆயுத மேந்தும் உரிமை, ஜூரிகளைக்

கொண்டு விசாரிக்கப்படும் உரிமை போன்ற உரிமைகளுக்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டன. நீதிமன்றத்தின் மூலமாக அல்லாமல் குடிமக்களின் உயிர், சுதந்திரம், உடமை ஆகியவற்றை அரசு பறித்துக் கொள்ள முடியாது.

## 4. நீதித்துறை உருவாக்கப்படுதல் : 1789

அமெரிக்க அரசியலமைப்பு 'ஒரு தலைமை நீதிமன்றமும், அதன் கீழ் மற்ற நீதிமன்றங்களும் அமைக்கப் படலாம்' என்று மட்டுமே குறிப்பிட்டிருந்தது. மற்ற விபரங்களை காங்கிரஸ் முடிவு செய்து கொள்ளட்டும் என்று விட்டுவிட்டது. எனவே காங்கிரஸ் 1789, செப்டம்பர் 24-ல் நீதித்துறை சட்டம் ஒன்றை இயற்றி நீதித்துறையை உருவாக்கியது. அதன்படி தலைமை நீதிமன்றம், மூன்று சர்கியுட் நீதிமன்றங்கள், பதிமூன்று மாவட்ட நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன. தலைமை நீதி மன்றத்தில் ஒரு தலைமை நீதிபதியும், ஐந்து உதவி நீதிபதிகளும் இருப்பார்கள். நியுயார்க்கைச் சேர்ந்த ஜான் ஜே (John Jay) தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

கூட்டாட்சி சட்டம் பற்றிய சாதாரண வழக்குகள் முதலில் மாவட்ட நீதிமன்றங்களிலும், அதன் மேல் முறையீடு சுற்று நீதிமன்றம் (Circuit Court) மற்றும் தலைமை நீதிமன்றத்திலும் தொடுக்கப்படலாம். தலைமை நீதிமன்றத்துக்கு அரசியல் அமைப்பை பாதுகாக்கவும் அதற்கு விளக்கம் அளிக்கவும் அதிகாரம் கொடுக்கப்பட்டது. 1793-ல் தலைமை நீதிமன்றம் விசாரித்து தீர்ப்பளித்த முதல் வழக்கு சிஷோாம் எதிர் ஜார்ஜியா (Chisholm Vs Georgea) ஆகும். இந்த தீர்ப்பு ஜார்ஜியா மாநிலத்துக்கு எதிராகவே அமைந்தது. இதன் விளைவாக ஒரு மாநிலத்தின் குடிமகன் பிற மாநிலத்திற்கெதிராகவோ, பிற நாட்டிற் கெதிராகவோ வழக்குத் தொடுப்பதைத் தடுக்கும் பதினோறாவது அரசியலமைப்புத் திருத்தம் வேகமாக நிறைவேற்றப்பட்டது.

## 5. தாமஸ் ஜெபர்சனும், அலக்சாந்தர் ஹாமில்டனும் (அரசியல் கட்சிகளின் உதயம்)

ஜார்ஜ் வாஷிங்டன் காலத்தில் அமெரிக்காவில் வளர்ந்து வந்த இளம் ஜனநாயகத்தில் மிகப் புகழ்பெற்ற மேதைகளாக விளங்கியவர்கள் அலெக்சாந்தர் ஹாமில்டன், தாமஸ் ஜெபர்சன் ஆகியோர் ஆவர். இவர்கள் இருவருமே அமெரிக்கர்களின் இரண்டு முக்கிய வாழ்க்கை முறையின் பிரதிநிதிகளாக விளங்கினர். அந்த முறை ஒன்றுக்கொன்று முரணானதுதான். ஆனால் அவை பேராற்றல் பெற்றவை. புறக்கணிக்க முடியாதவை

ஒரு சிறு கோஷ்டியினரால் நடத்தப்படும் வலுவான மைய

அரசாங்கமே நாட்டிற்குத் தேவை என்று ஹாமில்டன் கருதினார். அத்தகைய ஆட்சியில் தான் பிரிவினை சக்திகளை ஒடுக்க முடியும், பன்னாட்டு வாணிபம் பெருகும், உள்நாட்டு வர்த்தகம் செழிக்கும் என்றார். இக்கொள்கையை ஆதரித்தவர்கள் கூட்டாட்சி கட்சியினர் (Federalists) என்று அழைக்கப்பட்டனர்.

ஆனால் தாமஸ் ஜெபர்சன் மாநில உரிமைகளுக்கு முக்கியத்துவம் அளித்தார். விவசாயிகளின் நலன்கள், தனி நபர் சுதந்திரம் ஆகியவற்றுக்கே முக்கியத்துவம் கொடுத்தார். இவரது கோட்பாடுகளைப் பின்பற்றியவர்கள் கூட்டாட்சி கட்சி எதிர்ப்பாளர்கள் (Anti-Federalists) எனப்பட்டனர்.

ஹாமில்டனின் கொள்கைகள் தேசியத்திற்கும், ஜெபர்சனின் கொள்கைகள் குடியரசுக்கும் வெற்றியைத் தேடித் தந்தது. ஆனால் இக்கொள்கைகளே வாஷிங்டன் காலத்தில் அரசியல் கட்சிகளின் தோற்றத்திற்குக் காரணமானது. அரசியல் கட்சிகள் பற்றி அரசியல் அமைப்பு எதுவும் குறிப்பிடவில்லை என்பதும், வாஷிங்டனும் அரசியல் கட்சிகள் தோன்றுவதை விரும்பவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 6. அலெக்சாந்தர் ஹாமில்டனும், பொருளாதாரச் சீர்திருத்தங்களும்

ஜார்ஜ் வாஷிங்டனின் புதிய நிர்வாகத்தை எதிர்நோக்கிய பிரச்சனைகளில் முக்கியமானது நிதி, பொருளாதாரம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் ஆகும். இந்த பிரச்சனைகளை தனது திறமை மிக்க நிதி அமைச்சர் அலெக்சாந்தர் ஹாமில்டன் மூலம் வெற்றிகரமாகச் சமாளித்தார்.

### ஹாமில்டனின் வாழ்க்கைக் குறிப்பு

அலெக்சாந்தர் ஹாமில்டன் நெவிஸ் (Nevis) என்ற மேற்கு இந்தியத் தீவில் 1757 ல் பிறந்தார். தற்போதைய கொலம்பியா பல்கலைக் கழகமாக விளங்கும் கிங்ஸ் கல்லூரியில் பயின்றார். இளமையிலேயே கூரிய சிந்தனை, அலுக்காத ஆற்றல், முன்னுக்கு வர தீவிரமான ஆசை, பக்தி விசுவாசம், தன்மானம் ஆகிய குணங்களைக் கொண்டிருந்தார். சுதந்திரப்போரின் போது தனது இருபதாம் வயதில் பீரங்கிப்படையின் தளபதியானார். வாஷிங்டனின் நம்பிக்கைக்குரிய முக்கியத் தலைவரானார். தனது ஆற்றல், தெள்ளறிவு காரணமாக நியுயார்க் தேச பக்தர்களின் தலைவராக உயர்ந்தார். 1789, செப்டம்பர் மாதம் தனது 32-ம் வயதில் அமெரிக்காவின் முதலாவது கருவூலச் செயலராக நியமிக்கப்பட்டார். நிதித் துறையில் ஹாமில்டன் நிகழ்த்திய சாதனைகள் அவருக்குப் புகழைத் தேடித் தந்தன.

## a) ஹாமில்டனின் நிதிநிலை அறிக்கை

ஹாமில்டன் பதவியேற்ற போது தேசியக் கடன் 52 மில்லியன் டாலராக இருந்தது. கருவூலத்தில் பணம் இல்லை. கணக்கு வழக்குகள் குழப்பமாக காணப்பட்டது. பழைய காகிதப் பணம் செல்லாதவை ஆகியிருந்தன. இச்சூழ்நிலையில் 1791, ஐனவரிக்கும் 1792, ஐனவரிக்கும் இடையே, பொதுக்கடன், செய்பொருள் உற்பத்தி, வங்கி, நாணயம், பொதுக்கடன் பற்றிய இரண்டாம் அறிக்கை ஆகிய மொத்தம் ஐந்து அறிக்கைகளை காங்கிரசில் சமர்பித்தார். இந்த அறிக்கையில் தேசியநிதிமுறையை வளர்ச்சியடையச் செய்யும் திட்டங்கள் அடங்கி இருந்தன.


## b) தேசிய கடன் பிரச்சனை தீர்க்கப்படுதல் : National Debt.

அமெரிக்க சுதந்திரப் போரின் போது பிரான்ஸ், ஸ்பெயின், ஹாலந்து ஆகிய நாடுகளிலிருந்தும், அமெரிக்க பொதுமக்களிடமிருந்தும் மொத்தம் 52 மில்லியன் டாலர் கடன் வாங்கியிருந்தது. இதற்காக கடன் பத்திரங்கள் (Bonds) கொடுக்கப்பட்டிருந்தது. இந்தக் கடன்களைத் திருப்பிக் கொடுத்தால்தான் கூட்டாட்சி அரசு மீது மக்களுக்கும், மற்ற நாட்டினருக்கும் நம்பிக்கை பிறக்கும் என்று ஹாமில்டன் வலியுறுத்தினார். அரசாங்கம் தங்கள் கடன்களை திரும்பக் கொடுக்காது என்று நினைத்து குறைந்த விலைக்கு தங்கள் கடன்பத்திரங்களை விற்றுவிட்ட பலர் ஹாமில்டனின் இந்த திட்டத்தை எதிர்த்தனர்.

ஆனால் அவர்களின் எதிர்ப்பை பொருட்படுத்தாது பத்திர மசோதா (Funding Bill) ஒன்றை காங்கிரஸ் நிறைவேற்றச் செய்தார். அதன்படி பழைய கடன் பத்திரங்கள் திரும்பப் பெறப்பட்டு அரசாங்க உத்திரவாதமும் வட்டியும் கொண்ட புதிய கடன் பத்திரங்கள் அளிக்கப்பட்டன. இந்த துணிச்சலான நடவடிக்கை மூலம் அரசாங்க கடன்பத்திரங்கள் ஸ்திரமாக, பாதுகாப்பான நிலையில் வைக்கப்பட்டன. கடன்தொகையைப் பெற்ற செல்வந்தர்களால் தொழில் வளர்ச்சி ஏற்பட்டது. இதனால் தேசிய அரசாங்கம் பலப்படுத்தப்பட்டது. மேலும் பண விஷயங்களைக் கையாளுவதில் மாநிலங்களுக்கு மேலானதாக விளங்குவது தேசிய அரசாங்கமே என்பதையும் உணர்த்தியது.

## c) மாநிலக்கடன் பிரச்சனை தீர்க்கப்படுதல், புதிய தலைநகரம் நிர்ணயிக்கப்படுதல்

அமெரிக்க சுதந்திரப் போரின்போது மாநிலங்களிடம் இருந்து வாங்கியிருந்த கடன் தொகையையும் மைய அரசே ஏற்க வேண்டும் என்றும் ஹாமில்டன் வலியுறுத்தினார். இதனை



அலக்சாந்தர்

வர்ஜினியா பென்சில்வேனியா போன்ற தென் மாநிலங்கள் எதிர்த்தன. புதிய இங்கிலாந்து மாநிலங்கள் ஆதரித்தன. இதற்கு முக்கிய காரணம் தென் மாநிலங்கள் வழங்கிய கடன் தொகை குறைவாகவும், வட மாநிலங்கள் வழங்கிய கடன் தொகை அதிகமாகவும் இருந்ததேயாகும்.

இந்த எதிர்ப்பைச் சமாளிக்க ஹாமில்டன் சமரசத் திட்டம் ஒன்றைத் தெரிவித்தார். அப்போது ஒரு புதிய தலைநகரம் நிறுவும் திட்டம் இருந்தது. தென் மாநிலங்கள் ஹாமில்டனின் திட்டத்திற்கு ஒப்புக்கொண்டால், நாட்டின் தலைநகர் தென் பகுதியில் உள்ள பொட்டாமக் நதிக்கரையில் பத்து சதுர மைல் பரப்பளவில் அமைக்கப்படும் என்று வாக்குறுதியளித்தார். இவ்வாறுதான் கொலம்பியாமாவட்டம் உருவானது. 1790லிருந்து பத்து ஆண்டுகள் நியுயார்க்கி லிருந்து பிலடெல்பியாவுக்கும், 1800-லிருந்து பொட்டாமக் நதிக்கரை யில் புதிதாக அமைக்கப் பட்ட தலைநகருக்கும் மாற்றப்பட்டது. அதே நேரம் ஹாமில்டனின் விருப்பப்படி மாநிலக்கடன் ஏற்பு மசோதாவும் நிறைவேற்றப் பட்டது. அதன்படி 18 மில்லியன் டாலர்கள் எல்லா மாநிலங்க ளுக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

### d) தேசிய வங்கி உருவாக்கப்படுதல்

நாட்டிற்கு ஒரு தேசிய வங்கி நிறுவப்பட வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தினார் ஹாமில்டன். அரசாங்க நிதி இருப்பினை பொறுப்புடன் பாதுகாக்கவும், கடன்பத்திரங்களை வழங்கவும் வரிகளை தகுந்த முறையில் வசூலிக்கவும், பொது

நிதிக்கணக்கினை வைத்துக்கொள்ளவும், தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலதனங்களை அளிக்கவும், பணப்புழக்கத்தைச் சீர்படுத்தவும் ஒரு தேசிய வங்கி அவசியம் என்றார். இதன்படி இங்கிலாந்து வங்கியைப் போல் 'அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வங்கி' **(United States Bank)** ஒன்றை அமைக்கும் திட்டத்தை வெளியிட்டார்.

இதன்படி பத்து மில்லியன் டாலர் முதலீட்டில் வங்கி ஒன்று ஆரம்பிக்கப்படும். அதில் ஐந்தில் ஒருபங்கு அரசும், மீதி நான்கு பங்குகளை தனியாரும் முதலீடு செய்வர். மக்களிடம் இருந்து வைப்பு தொகைகளைப் பெற்றுக் கொள்ளும். இதனைச் செயல்படுத்த 'வங்கி மசோதா' என்ற பெயரில் காங்கிரசில் ஹாமில்டன் அறிமுகப்படுத் தினார். ஆனால் இந்த வங்கி மசோதாவுக்கு ஜெபர்சன் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். 'அரசியலமைப்புச் சட்டத்தில் வங்கியினை உருவாக்குவது பற்றி எதுவும் கூறப்படவில்லை. கூறப்படாத எஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களுக்கே என்ற அடிப்படையில் வங்கிகளை உருவாக்க கூட்டாட்சி அரசுக்கு அதிகாரம் இல்லை' என்றார்.

ஆனால் ஹாமில்டன் திறமையாக வாதிட்டார். 'அரசியல் சட்டத்தில் எல்லாக் காரியங்களையும் விவரித்து எழுதுவது இயலாத காரியம். கூட்டாட்சி அரசுக்குப் பணப் புழக்கத்தைக் கட்டுப்படுத்தவும்,கடன் வாங்கவும்,வரிவிதிக்கவும் உரிமை தரப் பட்டுள்ளது. எனவே இந்தப் பணிகளைக் கவனிக்க ஒரு வங்கியை நிறுவலாம் என்ற 'உள்ளடங்கிய அதிகாரத்தை' (implied power) ஊகிப்பது ஒரு நிர்வாகியின் கடமை' என்று ஹாமில்டன் வாதிட்டார். இதனை ஏற்றுக் கொண்ட காங்கிரஸ் வங்கி மசோதாவை நிறைவேற்றியது.

இதன்படி அமெரிக்க ஐக்கியநாடுகள் வங்கி 1741, பிப்ரவரி 25-ல் அமைக்கப்பட்டது. அதன் தலைமை அலுவலகம் பிலடெல்பியாவில் அமைக்கப்பட்டது. நாட்டின் முக்கியமான எட்டு நகரங்களில் அதன் கிளைகள் அமைக்கப்பட்டன. இந்த வங்கி இருபது ஆண்டுகள் செயல்பட சட்டம் அனுமதியளித்தது.

## 7) தேசிய வரிவிதிப்புக் கொள்கை : National Revenue Policy

மாநிலங்களின் கடன் சுமையை ஏற்றுக் கொண்டதாலும், மக்களின் சேமிப்புகளுக்கு ஒழுங்கான வட்டியினைக் கொடுக்க வேண்டியதிருந்தாலும் கூட்டாட்சி அரசாங்கத்தின் நிதிநிலையில் நெருக்கடி ஏற்பட்டது. எனவே அரசு வருவாயைப் பெருக்க பல நடவடிக்கைகளை மேற்கொண்டார் ஹாமில்டன். வளர்ந்து வரும் தொழிற்துறையைப் பாதுகாக்கவும், வருமானம் பெறவும் ஏற்றுமதி

இறக்குமதிப் பொருட்களின் மீது வரி விதிக்கும் சுங்கவரிச்சட்டம் (Tariff Act) ஒன்றை 1789, ஜுலை 4-ல் இயற்றினார்.

இந்த சட்டத்தின்படி பதிமூன்று பொருட்கள் மீது குறிப்பாகவும், பிறப்பொருட்கள் மீது பொதுவாகவும் 7.5 முதல் 15 சதவீதம் வரை வரிவிதிக்கப்பட்டது. இது சராசரியாக 8.5 சதவீதமே ஆகும். பின்னர் இந்த வரி சிறிது அதிகரிக்கப்பட்டது. 1791, மார்ச் 3-ம் தேதி வங்கி மீது ஒரு காலனுக்கு 7 அல்லது 8 சென்ட் உள்நாட்டு (Excise) வரி விதிக்கப் பட்டது. இதனால் அரசுக்குக் கிடைத்த வருவாய் அதிகரித்தது.

**விஸ்கி கலகம் : (Whisky Rebellion)**

'ஹாமில்டனின் வரிக்கொள்கை அருவருப்பானது என்றும், முன்யோசனையோடு கூடியது அல்ல' என்றும் ஜெபர்சன் குறை கூறினார். மேலும் விஸ்கி மீது விதிக்கப்பட்ட வரிக்கு மேற்கு பென்சில் வேனியாவில் கடும்எதிர்ப்பு ஏற்பட்டது.

பென்சில்வேனியா, வர்ஜினியா, வடகரோலினா ஆகிய பகுதி களில் ஸ்காட்லாந்து அயர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து வந்து குடியேறியிருந்த முரட்டு மக்கள் சில தானிய வகைகள், சோளம், ரை(Rye) போன்ற பயிர் வகைகளைப் பயிரிட்டனர். அந்தத் தானியங்களை மலைகளைக் கடந்து சென்று சந்தைகளுக்கு அனுப்ப முடியாததால் அவைகளிலிருந்து ஒரு வகை **'விஸ்கி'** என்ற மதுவினைத் தயாரித்து பணம் சம்பாதித்தனர். எனவே அங்கு ஒவ்வொரு குடியானவன் வீட்டிலும் விஸ்கி தயாரிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் விஸ்கி மீது விதிக்கப்பட்ட வரி தானியங்கள் மீது விதிக்கப்பட்ட வரிபோல ஆயிற்று.

எனவே மேற்குபென்சில்வேனியாவில் இருந்த குடியானவர்கள் விஸ்கி மீது விதிக்கப்பட்ட வரியைக் கொடுக்க முடியாது என்று கூறி 1784-ல் கலகம் செய்தனர். இதற்கு விஸ்கி கலகம் என்று பெயர். ஆனால் இந்த கலகத்தை மூன்று மாநிலங்களில் இருந்து இராணுவத்தை வரவழைத்து அடக்கினார் வாஷிங்டன்.

ஆனால் இந்த விஸ்கி கலகத்தினால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அரசாங்கத்தின் நடவடிக்கையைப் பொறுப்பற்றது என்றும் இராணுவத்தின் அத்துமீறல் என்றும் ஜெபர்சனின் ஆதரவாளர் களான குடியரசுக் கட்சியினர் கண்டித்தனர். ஆனால் கலகம் அடக்கப்பட்டது கூட்டாட்சி அரசின் வலிமையையும் புகழையும் உயர்த்தியது. மாநிலங்களில் ஏற்படும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட கூட்டாட்சி அரசு இராணுவத்தையும் பயன்படுத்த உரிமை உண்டு என்பதையும் உணர்த்தியது. (ஜெபர்சன் பதவியேற்ற பின்னர் விஸ்கிவரி ரத்து செய்யப்பட்டது).

## ஹாமில்டனின் பொருளாதாரக் கொள்கை – ஒரு ஆய்வு

ஹாமில்டனின் மேற்கண்ட நிதி நடவடிக்கைகள் கீழ்கண்ட பல விதங்களில் நன்மையளித்தன.

a) கூட்டாட்சி அரசு விரும்பிய வருமானம் கிடைத்தது. அத்துடன் நாட்டின் நிதிநிலையை நல்ல முறையில் சீர்படுத்தி, பொதுக்கடனைத் தீர்த்து நாட்டின் உறுதித்தன்மையை நிலைநாட்ட கூட்டாட்சிவாதி களால் தான் முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையை ஹாமில்டன் மக்களிடம் வளர்த்தார். இதனால் கூட்டாட்சி அரசுக்கு ஆதரவளிப்பவர் களின் எண்ணிக்கை அதிகரித்தது.

b) ஹாமில்டனின் பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாக நாட்டிற்கு ஒரு வலிமையான பொருளாதாரக் கொள்கைக்கு அடித்தளம் இடப்பட்டது. வெளிநாடுகள் அமெரிக்க ஐக்கிய நாடுகள்மீது நம்பிக்கை வைக்க ஆரம்பித்தன. அத்துடன் உள்நாட்டில் கைத்தொழில்கள், வியாபாரம், கப்பல் கட்டும் தொழில் ஆகியவை வளர்ச்சியடைந்தன.

ஆனால் ஹாமில்டனின் பொருளாதார நடவடிக்கைகள் ஏல்லாமே அரசியல் லாபம் கருதியே மேற்கொள்ளப்பட்டன. நிதி சேர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன் மக்கள் மத்தியில் கூட்டாட்சி அரசுக்கு செவ்விந்தியர்களின் ஆதரவைப் பெறவும், மதிப்பைப் பெறவும் இத்திட்டங்கள் பின்பற்றப்பட்டன. மேலும் ஹாமில்டனின் நடவடிக்கைகள் பல எதிர் விளைவு களை ஏற்படுத்தின. அமெரிக்க வணிகர்கள் கொள்ளை லாபம் சம்பாதித்தனர். பலர் லஞ்சம் வாங்க ஆரம்பித்தனர். நிர்வாகத்தில் ஊழல் தலைகாட்டியது. வரிச்சுமையால் மக்கள் சமுதாயத்தில் ஒரு பிரிவினரிடம் அதிர்ப்தியும், அவநம்பிக்கையும் எதிர்ப்பும் ஏற்பட்டது. முக்கியமாகக் காப்பு வரிப்பிரச்சனை எழுபது ஆண்டுகளுக்குப் பின்னர் வடபகுதி மாநிலங்களுக்கும், தென்பகுதி மாநிலங்களுக்குமிடையே உள்நாட்டுப் போர் ஏற்பட முக்கிய காரணமாக அமைந்தது.

## 7) புதிய மாநிலங்கள் சேர்த்துக் கொள்ளப்படுதல்

அமெரிக்க ஐக்கிய நாடுகள் சுதந்திரமடைந்த போது பதிமூன்று மாநிலங்கள் இருந்தன. நியுயார்க் மாநிலத்திற்கும், நியு ஹாம்ஷயர் மாநிலத்திற்கும் இடைப்பட்ட பகுதி வெர்மாண்ட் (Vermont) ஆகும். இதனை இணைத்துக் கொள்ள இந்த இரண்டு மாநிலங்களும் போட்டி யிட்டன. ஆனால் 1791ல் வெர்மாண்ட் பதிநான்காவது மாநிலமாக சேர்த்துக் கொள்ளப் பட்டது. 1792-ல் கென்டக்கியும் (Kentucky), 1797-ல் டென்னசியும் (Tennessee) மாநிலங்களைச் சேர்த்துக்கொள்ளப் பட்டன. இந்த மாநிலங்களில்

அடிமைமுறை சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப் பட்டது. இங்குள்ள எல்லா ஆண்களுக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது ஆகும்.

## 8) இந்தியர்கள் மீது போர்கள்

சுதந்திரப் போருக்குப் பின்னர் வடமேற்கிலும் தென்கிழக்கிலும் செவ்விந்தியர்களின் பிரதேசங்களை அழித்து குடியேறலாயினர் அமெரிக்கர்கள். இந்திய பூர்வீககுலங்களான கிரீக்குகள், செரோக்கிகள், செமினால்கள் போன்றோர் மெக்கில்விரே (McGillivray) என்ற கிரீக் தலைவரின் கீழ் ஒன்று சேர்ந்து போராடினர். ஆனால் அவர்களது பழைய போர் முறை அமெரிக்கர்களின் துப்பாக்கிகளுக்கு முன்பு வலுவிழந்தது. 1789 முதல் பல இடங்களில் சிறுசிறு போர்கள் ஏற்பட்டன. 1790-ல் ஜெனரல் ஹார்மர் (General Harmer) என்பவர் தலைமையில் அனுப்பப்பட்ட படையை செவ்விந்தியர்கள் தோற்கடித்தனர்.

வடமேற்குப் பகுதியின் ஆளுநராக இருந்த ஜெனரல் ஆர்தர் செயின்ட் கிளேர் (St.Clair) என்பவரின் படைகளை 1791-நவம்பர் 4-ல் போர்ட் ரிக்கவரி (Fort Recovery) என்ற இடத்தில் நடைபெற்ற போரில் செவ்விந்தியர்கள் அப்படையை தோற்கடித்து முற்றிலும் அழித்தனர். எனவே வெகுண்டெழுந்தார் வாஷிங்டன். செவ்விந்தியர்களை கூண்டோடு ஒழித்துக்கட்டி விடுவதாக கர்ஜித்தார். அதன்பிறகு அந்தோணி வேய்ன் (Antony Wayne) என்பவர் தலைமையில் மற்றொரு படை அமைக்கப்பட்டது. வெறிபிடித்த அந்தோணி (Mad Antony) என்று அழைக்கப்பட்ட இவர் நன்றாகத் திட்டமிட்ட பின்பு இந்தியர் வாழ்ந்த ஓகியோ மாநிலத்தினுள் புகுந்தார். சிறிய கடலாமை (Litle Turtle) என்ற தலைவனின் தலைமையில் போரிட்ட செவ்விந்தியர்களைத் தோற்கடித்தார். படுகொலை செய்தார். பின்னர் செவ்விந்தியர்களுடன் ஒப்பந்தங்கள் செய்து கொண்டு அவர்களது ஓகியோ, இந்தியானாவின் தென்கிழக்குப் பகுதிகளை அமெரிக்கர்கள் அபகரித்துக் கொண்டனர்.

## வாஷிங்டனின் வெளிநாட்டுக் கொள்கை

ஜார்ஜ் வாஷிங்டனின் வெளிநாட்டுக் கொள்கை அமெரிக்காவின் நலனைப் பேணும் வகையில் உருவாக்கப் பட்டது. ஆனால் நடைபெற்ற நிகழ்ச்சிகள் யாவும் கவலை அளிப்பதாக இருந்தது. முக்கியமாக ஐரோப்பிய நிகழ்ச்சிகள் வாஷிங்டனின் நிர்வாகத்திற்கு குழப்பம் மிகுந்த பிரச்சனைகளை உருவாக்கித் தந்தன. இங்கிலாந்து, ரஷ்யா தவிர மற்ற நாடுகள் அமெரிக்காவுடன் இராஜிய உறவுகளை ஏற்படுத்திக்கொண்டன. இங்கிலாந்து

அமெரிக்காவுடன் வணிக உறவு வைத்துக் கொள்ள மறுத்து விட்டது. ஐரோப்பிய அரசியல் விவகாரங்களில் அமெரிக்காவும் இழுக்கப்பட்டது. இதனால் நாட்டில் லேசான பதட்ட நிலை ஏற்பட்டது.

ஆனால் ஜார்ஜ் வாஷிங்டன் தனது திறமையான வெளி உறவுக் கொள்கையால் நாட்டில் அமைதியை ஏற்படுத்தினார். பன்னாட்ட ளவில் அமெரிக்காவுக்கு நல்ல மதிப்பைப் பெற்றுத் தந்தார். ஆனால் கூட்டாட்சிக் கட்சியினரும், குடியரசுக் கட்சியினரும் வெளிநாட்டுக் கொள்கையிலும் கருத்துவேறுபாடு கொண்டு மோதிக் கொண்டனர்.

### a) அமெரிக்காவும் பிரான்சும்

வாஷிங்டன் பதவி ஏற்ற சில நாட்களிலேயே பிரெஞ்சுப் புரட்சி துவங்கியது. புரட்சி ஏற்பட்ட போது ஆரம்பத்தில் அமெரிக்க மக்கள் அதனை ஆதரித்தனர். ஆனால் பின்னர் ஏற்பட்ட நிகழ்ச்சிகளால் அமெரிக்க மக்களின் எண்ணங் களிலும் மாறுதல் ஏற்பட்டது. 1792-செப்டம்பரில் பிரான்ஸ் ஒரு குடியரசாகப் பிரகடனப்படுத்தப் பட்டது. ஆனால் 1793 ஜனவரி 21-ல் பதினான்காம் லூயி கொல்லப் பட்டதையும், பயங்கர ஆட்சி நிறுவப்பட்டதையும், உயர் குடியினர் பலர் கொல்லப் பட்டதையும் கூட்டாட்சிக் கட்சியினர் வெறுத்தனர். ஆனால் குடியரசுக் கட்சியினர் பிரெஞ்சு மக்கள் தங்கள் உரிமை களுக்காகவே போராடுகிறார்கள் என்று புரட்சி அரசாங்கத்தை ஆதரித்தனர். மேலும் 1778-ம் வருட அமெரிக்க-பிரெஞ்சு ஒப்பந்தம் மதிக்கப்பட வேண்டும் என்றனர்.

1793-ல் பிரெஞ்சு புரட்சி அரசு இங்கிலாந்து, ஸ்பெயின் நாடுகளுக்கெதிராகப் போர் பிரகடனம் செய்தது. இந்தப் போரில் பழைய உடன்படிக்கைக்கு மதிப்பளித்து அமெரிக்கா, பிரான்சுக்கு ஆதரவாகப் போரிட வேண்டுமென்று குடியரசுக் கட்சியினர் வற்புறுத்தினர். ஆனால் ஜார்ஜ்வாஷிங்டன் நிதான மாகச் செயல் பட்டார். அப்போது அமெரிக்க ராணுவம் வலுவற்ற நிலையிலிருந்த தாலும், பொருளாதாரம் ஸ்திரமற்ற நிலையிலிருந்ததாலும், அரசியல் ஒற்றுமை காணப்படாத தாலும் போரில் அமெரிக்கா தலையிடக் கூடாது என்று முடிவெடுத்தார் வாஷிங்டன்.

அதன்படி, 1793 ஏப்ரல் 22-ல் 'நடுநிலைப் பிரகடனம்' (Proclamation of Neurality) ஒன்றை வெளியிட்டார் வாஷிங்டன். அதன்படி நடைபெற்றுக் கொண்டிருக்கும் பிரெஞ்சுப் புரட்சிப் போர்களில் அமெரிக்கா எந்த நாட்டின் பக்கமும் சாராது நடுநிலை வகிக்கும். அமெரிக்க மக்கள் எவரும் போரில் எந்த நாட்டையும் ஆதரிக்கக்கூடாது என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த சூழ்நிலையில் அமெரிக்காவுக்கு பிரெஞ்சு தூதுவராக நியமிக்கப்பட்ட எட்மண்ட் ஜெனட் (Edmond Genet) என்பவர் பிலடெல்பியா வந்த போது அவருக்கு ஜெபர்சனின் ஆதரவாளர்கள் அமோக வரவேற்பளித்தனர். அதனை தவறுதலாக 'நடுநிலை அறிக்கை மக்களின் உண்மையான விருப்பங்களை எதிரொலிக்கவில்லை' என்று கணித்து நடுநிலை அறிக்கைக்கு விரோதமாகச் செயல்பட்டார் ஜெனட். 'வாஷிங்டன் ஒரு சக்தியற்ற கிழவன் ; ஆங்கிலேயரின் கைகைக்கு ஆடும் பொம்மை' என்று எழுதினார். ஸ்பானியர்களிடமிருந்து நியு ஆர்லியன்சைக் கைப்பற்ற மாலுமிகளைத் திரட்டினார். பெட்டிட் டெமாகிரட் (Petit Domocrat) என்ற கப்பலை அமர்த்தி நடவடிக்கையில் இறங்கினார்.

இதனால் கோபமடைந்த வாஷிங்டன் ஜெனட்டை திரும்ப அழைத்துக் கொள்ளுமாறு பிரெஞ்சு அரசுக்கு கடிதம் எழுதினார். ஜெனட்டின் நடவடிக்கைகளை பிரெஞ்சு அரசும் விரும்பவில்லை. எனவே நாடு திரும்பினால் கொல்லப்பட்டு விடுவோம் என்று பயந்த ஜெனட், பதவியை இழந்து அமெரிக்காவிலேயே தங்கிவிட்டார்.

வாஷிங்டனின் நடுநிலைக் கொள்கையால் அமெரிக்கா ஐரோப்பியப்போரில் தேவையில்லாமல் இழுக்கப்படுவது தடுக்கப்பட்டு விட்டது. அத்துடன் இது பிரான்சுக்கு சாதகமான நிலையாகவே அமைந்தது. 1778-ம் வருட உடன்படிக்கையை அமெரிக்கா மதித்து நடக்க வேண்டும் என்று பிரெஞ்சு அரசு கேட்கவில்லை. அப்போது பாரிசில் அமெரிக்காவின் தூதுவராக இருந்த நோரிஸ் என்பவர் புரட்சிக்கெதிராகச் செயல்பட்டதால், பிரெஞ்சு அரசின் வேண்டுகோளின் படி வாஷிங்டன் அவரைத் திரும்ப அழைத்துக் கொண்டார். அவருக்குப் பதிலாக ஜேம்ஸ் மன்றோ பிரெஞ்சுத் தூதுவராக நியமிக்கப்பட்டார்.

## அமெரிக்காவும் இங்கிலாந்தும் : (ஜே உடன்படிக்கை, 1794)

வாஷிங்டனால் அறிவிக்கப்பட்ட 'நடுநிலை அறிக்கை' இங்கிலாந்துடன் மோதல் ஏற்படவும் வழிவகுத்தது. ஏற்கனவே 1783-ம் வருட பாரிசு உடன்படிக்கைக்கு விரோதமாக வடமேற்குப் பகுதியில் தனது வாணிப ஸ்தலங்களை நிறுவி இருந்தது. மேலும் கனடா மீது அமெரிக்கர் படையெடுத்தால் அதனைத் தடுப்பதற்காக செவ்விந்தியர்களின் ஆதரவைப் பெறுவதற்காக அவர்களுக்கு படைக்கருவிகளை வழங்கி வந்தது. அவர்கள் அந்தப் படைக்கலன்களின் உதவியுடன் மேற்கு நோக்கி சென்று அங்கு குடியேறிய அமெரிக்கரை தாக்கி வந்தனர். இதனால்

இங்கிலாந்துடனான மோசமான உறவை விருத்தி செய்ய 1791-ல் ஜார்ஜ் ஹெம்மாண்ட் (George Hammord) என்பவரை தனது முதல் தூதுவராக அமெரிக்காவுக்கு அனுப்பியது.

ஆனால் பிரெஞ்சுப் போர்களால் உறவு நிலை மீண்டும் சீர்கேட்டை அடைந்தது. புரட்சிப் போர்களின் போது அமெரிக்க வணிகர்கள் பிரான்சுடனும், பிரெஞ்சு மேற்கிந்தியத் தீவுகளுடனும் இலாபகரமான வியாபாரத்தில் ஈடுபட்டனர். இதனால் வெறுப்படைந்த இங்கிலாந்து 'பிரான்சுடன் அல்லது பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழ் உள்ள நாடுகளுடன் வாணிபம் செய்யும் அந்நியக் கப்பல்களை சோதனையிடுவதற்கும், பறிமுதல் செய்வதற்கும் தனக்கு உரிமை உண்டு' என்று கூறியது. அத்துடன் சுமார் 150 க்கும் மேற்பட்ட அமெரிக்க மாலுமிகளைப் பிடித்துச் சென்று தனது படையில் சேர்த்துக் கொண்டது. இதனால் பதட்டநிலை ஏற்பட்டது. போர் தவிர்க்க முடியாத தாகவே தோன்றியது.

எனவே உடனே இங்கிலாந்துடன் போர் புரிய வேண்டும் என்றும் அல்லது குறைந்த பட்சம் ஆங்கிலப் பொருட்களின் இறக்குமதி க்குத் தடைவிதிக்க வேண்டுமென்றும் ஜெபர்சன் ஆதரவாளர்கள் கோரினர். ஆனால் ஹாமில்டன் ஆதரவாளர்கள் இங்கிலாந்துக்கு எதிராகப் போர் புரிவதை எதிர்த்தார்கள். காரணம் நாட்டிற்குக் கிடைக்கும் 90 சதவித சுங்கவரி வருமானத்தில் 75 சதவீதம் இங்கிலாந்தி லிருந்து இறக்குமதி ஆகும் பொருட்கள்மூலம் கிடைத்தது. எனவே இங்கிலாந்துடன் போர் புரிந்தால் அது அமெரிக்கப் பொருளாதாரத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்று ஹாமில்டன் ஆதரவாளர்கள் கூறினர்.

இந்த சூழ்நிலையில் போர் ஏற்பட்டால் அதைவிட பெரிய வினை ஏதும் இல்லை என்று கருதினார் வாஷிங்டன். எனவே போரைத் தடுக்கும் நோக்கத்துடனும், அப்போது தலைமை நீதிபதியாக இருந்த ஜான் ஜே என்பவரை தனது சிறப்புத் தூதுவராக லண்டனுக்கு அனுப்பினார் வாஷிங்டன். ஜான் ஜே ஒரு அனுபவம் பெற்ற ராஜதந்திரி. அரசியலில் நமூலவலான தந்திரப் பேச்சுக்களை விட நல்ல மனமும் விவேகமும் அதிக பயனை அளிக்கும் என்று நம்பினார். சுமார் நான்கு மாத கால பேச்சுவார்த்தைக்குப் பிறகு 1749-ல் இங்கிலாந்துடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார். அதற்கு ஜே உடன்படிக்கை என்று பெயர். ஜே உடன்படிக்கையின்படி,

a) அமெரிக்காவின் வடமேற்கே இங்கிலாந்து தான் அமைத்திருந்த வாணிப நிலையங்களை இரண்டு வருடங்களுக்குள் மூடிவிட வேண்டும்.

b) அமெரிக்க வாணிகர்கள் இங்கிலாந்துக்காரர்களுக்கு செலுத்த வேண்டிய கடன்தொகையை அமெரிக்க அரசே பெற்றுக் கொண்டு செலுத்தும்.

c) அமெரிக்கக் கப்பல்களில் பிரான்சுக்கு உணவுப் பொருட்கள் அனுப்பினால் இங்கிலாந்துக்கு பறிமுதல் செய்யும் உரிமை உண்டு. ஆனால் மேற்கிந்தியத் தீவுகளுடன் சிறிய கப்பல்கள் மூலம் வியாபாரம் செய்து கொள்ளலாம்.

d) அமெரிக்கக் கப்பல் தொழிலுக்கும் வாணிபத்துக்கும் இங்கிலாந்தினால் ஏற்பட்ட நஷ்டத்தைக் கணக்கிட ஒரு நடுநிலையாளர் குழு அமைக்கப்படும். (இந்தக் குழுவின் முடிவின்படி பின்னர் இங்கிலாந்து பத்து லட்சம் டாலர் இழப்பீடு அளித்தது).

இந்த ஜே உடன்படிக்கையின்படி 'இனிமேல் அமெரிக்கக் கப்பல்கள் கடத்தப்படுவதை நிறுத்துவது, மாலுமிகள் கடத்தப்படுவதை நிறுத்துவது, செவ்விந்தியர்களுக்கு உதவி செய்வதை நிறுத்துவது ஆகியவை பற்றி எந்த உறுதிமொழியும் இங்கிலாந்து கொடுக்கவில்லை. எனவே இந்த உடன்படிக்கையை ஜெபர்சன் ஆதரவாளர்கள் எதிர்த்தார்கள். பத்திரிக்கைகள் கண்டித்தன. ஜே கொடும்பாவி பல இடங்களில் எரிக்கப்பட்டது.

ஆனால் ஜார்ஜ் வாஷிங்டன், சஞ்சலம் அடையவில்லை. இது ஒரு தற்காலிக அரசியல் நோய் என்று கருதி எதுவும் பேசவில்லை. ஒரு சில திருத்தங்களுடன் காங்கிரஸ் 'ஜே' உடன் படிக்கையை ஏற்றுக் கொண்டது. வாஷிங்டனும் இந்த உடன் படிக்கையின் ஷரத்துக்களில் அதிர்ப்தி கொண்டிருந்தாலும் உடன்படிக்கை இல்லாவிட்டால் போர்தான் என்பது அவருக்குத் தெரியும். எனவே போர் ஏற்படாமல் இருக்க இந்த உடன்படிக்கைக்கு ஆதரவளித்தார். வியாபாரிகளும், கப்பல் முதலாளிகளும் மைய அரசை வாழ்த்தினர். அடுத்த பதினேழு வருடங்களுக்கு இங்கிலாந்துடனான போர் தவிர்க்கப்பட்டது.

**அமெரிக்காவும் ஸ்பெயினும் : (பின்க்னே உடன்படிக்கை, 1795)**

ஜே உடன்படிக்கைக்குப் பிறகு இங்கிலாந்துடன் அமெரிக்கா சேர்ந்துகொண்டு தன்னிடமுள்ள லூசியானாவையும் புளோரிடாவையும் தாக்கக் கூடும் என்று ஸ்பெயின் அச்சம் அடைந்தது. எனவே அமெரிக்காவுடன் ஒரு உடன்படிக்கை செய்து கொள்ள நினைத்தது. இந்தச் சமயத்தில் ஸ்பெயினுடன் பேச்சுவார்த்தை நடத்த தாமஸ் பின்க்னே (Thomas Pinkney) என்பவரை அனுப்பினார் வாஷிங்டன். அதன்படி ஸ்பெயினுடன்

ஒரு உடன்படிக்கை 1795-ல் செய்து கொள்ளப்பட்டது. இதற்கு பின்க்னே உடன்படிக்கை என்று பெயர். இதன்படி,

a) புளோரிடாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான எல்லைக்கோடு 31-வது அட்சரேகை என்று குறிக்கப்பட்டது.

b) மிசிசிப்பி நதியின் தென்பகுதி முகதுவாரம் வரை கப்பல் செலுத்தும் வர்த்தக உரிமை அமெரிக்காவுக்கு கிடைத்தது.

c) கப்பல்களில் ஏற்றுவதற்காக நியு ஆர்லியன்ஸ் துறைமுகக் கிடங்குகளில் தங்கள் சரக்குகளை வைப்பதற்கு அமெரிக்கர்கள் அனுமதி பெற்றனர்.

d) புளோரிடாவில் வசிக்கும் இந்தியர்கள் எல்லையைக் கடந்து அமெரிக்கப் பகுதிகளைத் தாக்குவதை ஸ்பெயின் தடுக்க வேண்டும்.

இந்த பின்க்னே உடன்படிக்கையின்படி அமெரிக்கர்கள் தாங்கள் எதிர்பார்த்ததைவிட அதிகச் சலுகைகளை பெற்றனர். இது அமெரிக்காவுக்கு கிடைத்த பெரிய வெற்றியாகும்.

## ஜார்ஜ் வாஷிங்டனைப் பற்றிய மதிப்பீடு

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முதல் குடியரசுத் தலைவராக இரண்டு முறை மொத்தம் எட்டு ஆண்டுகள் பதவி வகித்த வாஷிங்டன் மூன்றாவது முறையாக தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை. இரண்டு முறையும் இவர் போட்டியின்றியே தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரது ஆட்சியின் இறுதிக்காலத்தில் இவரைக் குடியரசுக் கட்சியினர் கடுமையாக விமர்சித்தனர். எனவே தான் மூன்றாவது முறை தேர்தலில் நிற்க மறுத்து விட்டார். மவுண்ட் வெர்னான் என்ற தனது பண்ணைக்குச் சென்று அமைதியாகக் காலம் கழிக்க முடிவு செய்தார்.

1796-செப்டம்பர் 17-ல் நடைபெற்ற பிரிவு உபசார விழாவில் வாஷிங்டன் ஆற்றிய சொற்பொழிவு அவரது தேசப்பற்றின் உச்ச கட்டமாகும். நாட்டு மக்களுக்கு நல்ல பல கருத்துக்களை எடுத்துக் கூறினார். ஐக்கியமாக வாழும்படி அமெரிக்கர்களுக்கு அறிவுரை கூறினார். ஒன்றுபட்டு தேசிய ஒற்றுமைக்கு உழைக்கும்படியும் ஐரோப்பிய நாடுகளுடன் நிரந்தர உடன்படிக்கை செய்து கொள்ளுவதைத் தவிர்க்கும்படியும் மக்களைக் கேட்டுக் கொண்டார்.

ஜார்ஜ் வாஷிங்டன் தனது ஆட்சிகாலத்தில் சட்ட ரீதியான, வலிமையான ஒரு அரசாங்கத்தை அமைத்துக் கொடுத்தார். நாட்டின் பொருளாதார நிலையை மேம்படுத்தினார். நாட்டை எந்தப் போரிலும் ஈடுபடுத்தாமல் நீண்டகால அமைதிக்கு வழிவகுத்தார். நாட்டிற்கு நல்ல பல மரபுகளை விட்டுச் சென்றார்.

நாட்டிற்கு அவர் செய்த பணிகளை பாராட்டும் முகமாக அமெரிக்கர்கள் தங்கள் புதிய தலைநகருக்கு 'வாஷிங்டன்' என்று பெயர் சூட்டி மகிழ்ந்தனர்.

# 9. ஜான் ஆடம்ஸ்
## (John Adams, 1797-1801)

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் இரண்டாவது குடியரசுத் தலைவர் ஜான் ஆடம்ஸ் ஆவார். 1796-ல் நடைபெற்ற தேர்தலில் இவர் கூட்டாட்சி கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். துணைக் குடியரசுத்தலைவராக குடியரசுக் கட்சியைச் சேர்ந்த தாமஸ்ஜெபர்சன் தேர்ந்தெடுக்கப்பட்டார். அமெரிக்காவின் தலைசிறந்த ராஜதந்திரிகளில் ஜான் ஆடம்ஸ் ஒருவர் ஆவார். புரட்சியின் போது அரசியல் கருத்துக்கள் செறிந்த எழுத்தோவியங்களைப் படைத்தவர். இவர் ஒரு பழமை விரும்பி ஆவார். தூய்மையான நிர்வாகத்தினை அமெரிக்காவில் அமைக்க வேண்டும் என்று பாடுபட்டார். ஆனால் இவரது சில நடவடிக்கைகளால் கூட்டாட்சிக் கட்சியினர் மக்களின் நம்பிக்கையை இழந்தனர். 1800-ல் நடைபெற்ற தேர்தலில் இரண்டாம் முறையாகப் போட்டியிட்ட ஆடம்ஸ் தோற்கடிக்கப்பட்டார். அத்துடன் அமெரிக்காவில் கூட்டாட்சி சகாப்தமும் முடிவடைந்தது.

### ஜான் ஆடம்சனின் வாழ்க்கைக் குறிப்பு

ஜான் ஆடம்ஸ் 1735-ல் மசாசுசெட்சில் பிறந்தார். இவர் ஹார்வர்ட் கல்லூரியில் சேர்ந்து சட்டக்கல்வி பயின்று வழக்கறிஞரானார். இவர் மசாசுசெட்ஸ் சட்டமன்ற உறுப்பினராக இருந்து அமெரிக்க விடுதலையை ஆதரித்து பல துண்டு பிரசுங்களை வெளியிட்டார். தனது குடியேற்றத்தின் பிரதிநிதியாக முதலாவது, இரண்டாவது பிலடெல்பியா காங்கிரசில் பங்கு பெற்றார். 1778-ல் பிரான்சுக்கும் பின்னர் ஹாலந்துக்கும் கமிஷனராக நியமிக்கப் பட்டார். விடுதலைப் போரின் முடிவில் பாரிசில் நடந்த பேச்சு வார்த்தையில் பெஞ்சமின் பிராங்ளின், ஜே ஆகியோருடன் இவரும் பங்குபெற்றார். 1785-ல் அமெரிக்காவின் முதலாவது தூதுவராக இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார். இவர் ஜார்ஜ் வாஷிங்டன் காலத்தில் துணைக் குடியரசுத் தலைவராக எட்டு ஆண்டுகள் பணியாற்றினார். அமெரிக்காவின் ஆறாவது குடியரசுத் தலைவரான ஜான் குவின்சி ஆடம்ஸ் இவரது மகன் ஆவார்.

## ஆடம்சின் நிர்வாகத் தலைவர்கள்

புதிதாகப் பதவி ஏற்ற ஜான் ஆடம்ஸ் வாஷிங்டன் காலத்தில் பணியாற்றிய நிர்வாகத் தலைவர்களையே தொடர்ந்து பதவியில் வைத்திருந்தார். இது இவர் செய்த தவறாகும். ஏனெனில் இந்த நிர்வாகத் தலைவர்களில் பெரும்பாலோர் ஹாமில்டனின் ஆதரவாளர்கள். இவர்கள் ஹாமில்டனின் சொல்படியே நடந்தனர். அவரது ஆலோசனைப்படி செயல்பட்டனர். காங்கிரஸ் உறுப்பினர்கள் பலரும் ஹாமில்டனிடம் ஆலோசனை பெற்றனர். இவ்வாறு நிர்வாகத் தலைவர்கள் இரண்டு பிரிவாக செயல்பட்டனர். இது அரசியலிலும், மக்கள் சமுதாயத்திலும் பிரிவை ஏற்படுத்தியது. குடியரசுத் தலைவரின் பணிகளை சிறப்பாகச் செய்து முடிக்க மிகச் சிறந்த அரசியல் நோக்கும் செயல்பாட்டுத்திறனும் இருக்க வேண்டும். ஜான் ஆடம்சிடம் இந்த குணஇயல்பு காணப்படவில்லை. எனவே பல இக்கட்டான பிரச்சனைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது.

## 2. லோகன் சட்டம்

ஜே உடன்படிக்கையின் விளைவாக இங்கிலாந்தும் அமெரிக்காவும் நட்புடன் இருப்பதைக் கண்ட பிரெஞ்சு வெளிஉறவு மந்திரி டெலிராண்ட் சிந்திக்கலானார். அமெரிக்காவுக்கும் பிரான்சுக்கும் ஒரு விதமான இறுக்கமான நிலை காணப்பட்டது. இச்சூழ்நிலையில் பிலடெல்பியாவைச் சேர்ந்த ஜார்ஜ் லோகன் (George Logan) என்பவர் துணைக் குடியரசுத்தலைவர் ஜெபர்சனிடம் அறிமுகக் கடிதம் ஒன்றைப் பெற்றுக் கொண்டு டெலிராண்டிடம் கலந்து பேசி நாடு திரும்பினார். ஆடம்ஸ் அவரிடம் இருந்து செய்திகளைக் கேட்டு அறிந்தார். ஒரு சுமூகமான சூழ்நிலை ஏற்படவும் முயற்சி செய்தார்.

ஆனால் காங்கிரஸ் இதன் விளைவாக ஒரு சட்டத்தை இயற்றியது. கூட்டாட்சிக் கட்சியினரே இச்சட்டம் இயற்றப்படக் காரணமாவர். இதன்படி 'அமெரிக்கக் குடிமகன் ஒருவர் தனிப்பட்ட முறையில் வேறு நாட்டின் அரசாங்கத்துடன் தொடர்பு வைத்துக் கொள்வது தடுக்கப்பட்டது'. இதற்கு லோகன் சட்டம் என்று பெயர்.

## 3. X.Y.Z. பிரச்சனை : XYZ Affairs

இங்கிலாந்துடன் ஜே உடன்படிக்கைப்படி பிரச்சனைகளைத் தீர்த்துக் கொண்ட அமெரிக்கா, பிரான்சுடன் சில பிரச்சனைகளில் மோத நேரிட்டது. பிரான்ஸ் ஜே உடன்படிக்கையை வெறுத்தது. இதன்படி இங்கிலாந்துக்கு வழங்கப்பட்ட பல சலுகைகள் தங்களுக்கு கொடுக்கப்பட வில்லை என்று

அமெரிக்காமீது கோபமடைந்தது. எனவே ஆடம்சின் நிர்வாகத்தை பிரான்ஸ் ஆதரிக்கவில்லை. ஆடம்ஸ் அரசுக்கு எல்லாவித இடையூறுகளையும் கொடுத்தது. 1796-ல் பல அமெரிக்கக் கப்பல்களைப் பிடித்து பயணிகளை சிறையில் அடைந்தனர். அமெரிக்காவின் புதிய பிரெஞ்சுத் தூதுவராக 1797 மே 16ல் சார்லஸ் பின்க்னே பாரிஸ் சென்ற போது அவரை ஏற்றுக்கொள்ள மறுத்து நாட்டை விட்டு வெளியேறும்படி கூறியது பிரான்ஸ்.

இதனால் பிரான்ஸ் நாட்டுடன் பகைமை நிலவியது. அமெரிக்காவுக்கும் பிரான்சுக்குமிடையே போர் ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால் போரை விரும்பாத ஜான் ஆடம்ஸ் பிரான்சுடன் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த சார்லஸ் பின்க்னே, ஜான்மார்ஷல், எல்பிரிட்ஜ் கெர்ரி (Elbridge Gerry) ஆகிய மூன்று



ஜான் ஆடம்ஸ்

பேரைக் கொண்ட ஒரு குழுவை அமைத்தார். இதில் எல்பிரிட்ஜ் குடியரசுக் கட்சியையும், மற்ற இருவரும் கூட்டாட்சிக்கட்சியையும் சேர்ந்தவர்கள். இவர்களை பாரிஸ் சென்று ஒரு மாத காலத்திற்குப் பிறகு ஜான் ஆடம்சுக்கு ஒரு அறிக்கையை அனுப்பி வைத்தார்கள். அதன் சாராம்சம் வருமாறு :

"பாரிசில் டைரக்டரியின் வெளிஉறவு அமைச்சரின் ஆட்கள் மூன்று பேர் அமெரிக்க குழுவைச் சந்தித்தனர். அவர்கள் அமெரிக்க தூதுவர்களை சட்டப்படியாக ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டனர். பிரான்சுக்கு கடன்தொகை, ஆடம்ஸ் வெளியிட்ட பிரெஞ்சு எதிர்ப்பு அறிக்கைகளுக்கு மன்னிப்பு, மற்றும் பிரெஞ்சுத் தலைவர்களுக்கு கால் மில்லியன் டாலர் லஞ்சம்

தருதல் ஆகியவற்றை முதலில் கேட்டனர். அதற்கு நாங்கள் முடியவே முடியாது, ஆறு பென்ஸ் கூட கொடுக்க மாட்டோம் என்று கூறிவிட்டோம்". இந்த அறிக்கையில் அமெரிக்கக் குழுவைச் சந்தித்த மூன்று பிரெஞ்சுக்காரர்கள் **X, Y, Z** என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த அறிக்கையை காங்கிரசுக்கு அனுப்பி வைத்தார் ஆடம்ஸ் பெரும்பான்மையான அமெரிக்கர்கள் சினம் கொண்டனர். 'ஒரு பெரிய சுதந்திரமான, வலிமையான நாட்டின் பிரதிநிதிகளை சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளாத பிரான்சுக்கு இனிமேல் அடுத்த தூதுவரை அனுப்ப மாட்டேன்' என்று ஆடம்ஸ் உறுதிபடக் கூறினார். அமெரிக்க தூதுவர்களிடம் லஞ்சம் கேட்ட வெட்கக்கேடான செயலை வெளிப்படையாக ஆடம்ஸ் எதிர்த்ததால் அவர் புகழ் உயர்ந்தது. கூட்டாட்சிக் கட்சியினரின் நாட்டுப்பற்று பாராட்டப்பட்டது. ஆடம்ஸைப் புகழ்ந்து பல பாடல்கள் எழுதப்பட்டன. அதில் புகழ் பெற்ற பாடல் ஹாப்கின்சன் என்பவர் எழுதிய **'Hail Columbia'** என்ற பாடலாகும். பிரான்சின் இந்த செயலைக் கண்ட குடியரசுக் கட்சியினரும் அதிர்ச்சியடைந்தனர்.

## 4) பிரான்சுடன் கடற்போர்

**X, Y, Z** நிகழ்ச்சிக்குப்பிறகு பிரான்சுடன் போர் புரிவதைத் தவிர வேறு வழியே இல்லாமல் போய்விட்டது. அமெரிக்கா பிரான்சுடன் 1798 முதல் 1800 வரை போர் புரிந்தது. அது வரம்புக்குட்பட்ட அறிவிக்கப்படாத போராக இருந்தது. போருக்கு பணம் ஒதுக்குமாறு காங்கிரஸை ஆடம்ஸ் கேட்டுக் கொண்டார். ஆடம்சுடன் காங்கிரஸ் நன்கு ஒத்துழைத்தது. பிரான்சுடனான வணிக ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்பட்டன. 1778-ம் வருட ஒப்பந்தமும் ரத்து செய்யப்பட்டது.

1798ல் கப்பற்படைத்துறை **(Department of Navy)** அமைக்கப் பட்டது. நூற்றுக்கணக்கான போர்க்கப்பல்கள் செய்வதற்காக காங்கிரஸ் பண ஒதுக்கீடு செய்தது. அமெரிக்க கப்பற்படை பிரெஞ்சுக் கப்பல்களைப் பிடித்து வியத்தகு வெற்றி பெற்றது. கான்ஸ்டலேசன் **(Constellation)** என்ற அமெரிக்கக் கப்பல் வெஞ்சியன்ஸ் **(Vengeance)** என்ற பிரெஞ்சுக் கப்பலை பிடித்தது. பாஸ்டன் **(Boston)** என்ற கப்பல் பெர்சியு **(Berceau)** என்ற கப்பலை பிடித்தது. இது தவிர பல பிரெஞ்சு வணிகக் கப்பல் களை அமெரிக்கர்கள் பிடித்துக் கொண்டனர்.

இச்சமயத்தில் இங்கிலாந்து தனது கப்பற்படையை அமெரிக்காவுக்கு ஆதரவாக அனுப்ப முன்வந்தது. அதனை ஏற்றுக்

கொள்ள ஆடம்ஸ் மறுத்துவிட்டார். இருந்த போதிலும் கப்பற்படைக்குத் தேவையான வெடிமருந்துகளையும், குண்டு களையும் கொடுத்துதவியது. அமெரிக்க கப்பற்படை அதிகாரி களுக்கு நல்ல பயிற்சி அளித்து அனுப்பியது. போர் செய்திகள் பரிமாறிக்கொள்ளப்பட்டன. இவ்வாறு அமெரிக்கா தனது நடுநிலைக் கொள்கையைக் கைவிட்டு இங்கிலாந்துடன் சேர்ந்து பிரான்சுக்கு எதிராகப் போரிட்டது.

இச்சமயத்தில் பிரான்சில் முதல் சான்சுலாகப் பதவிஏற்ற நெப்போலியன் அமெரிக்காவுடன் போர்புரிவதைத் தவிர்த்து அமைதி ஏற்படுத்த விரும்பினார். அமெரிக்காவுடன் சமாதானம் செய்து கொள்வதாக மறைமுகமாக சொல்லி அனுப்பினார். ஆடம்ஸ் அதனை ஏற்றுக்கொண்டு தனது காபினட் மற்றும் நண்பர்களின் ஆலோசனை களுக்கு எதிராக, பேச்சுவார்த்தை நடத்த ஏற்பாடு செய்தார். அதன் விளைவாக 1800 செப்டம்பர், 30-ல் பிரான்சுடன் சமாதானம் செய்து கொள்ளப்பட்டது. இதன் விளைவாக சுமுகமான வாணிப உறவு மீண்டும் நிலை நாட்டப்பட்டது.

## 5) ஆடம்ஸ்காலத்தில் இயற்றப்பட்ட அடக்குமுறைச் சட்டங்கள்

பிரான்சுடனான போரில் நடுநிலைக் கொள்கையை மீறியது. அதிகாரப்பூர்வ அறிவிப்பு இல்லாமல் போர் செய்தது ஆகியவற்றை குடியரசுக்கட்சியினர் கடுமையாகக் கண்டித்தனர். பத்திரிக்கைகளில் எழுதினர். ஆனால் காங்கிரசின் இரு சபைகளிலும் பெரும்பான்மை பெற்றிருந்த கூட்டாட்சி கட்சியினர் இந்த நெருக்கடி நிலையைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு குடியாட்சிக் கட்சியினரை அரசியல் ரீதியாக ஒழித்துக் கட்டுவதற்கு கீழ்க்கண்ட பல சட்டங்களை இயற்றினர்.

### a) குடியுரிமைச்சட்டம் : Naturalisation Act

இந்தச் சட்டப்படி பதினான்கு ஆண்டுகளுக்கு குறையாமல் அமெரிக்காவில் குடியிருந்தவர்கள் மட்டுமே குடிஉரிமை பெறுவர்.

### b) அந்நியர்கள் சட்டம் : Alien Act.

இதன்படி விரும்பத்தகாதவர் என்று கருதப்பட்ட அந்நியரை நாட்டைவிட்டு வெளியேற்ற குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இச்சட்டத்தின் முக்கிய நோக்கம் குடியரசுக் கட்சியை ஆதரித்த ஏராளமான ஐரிஸ் நாட்டுக்காரர் களையும், பிரெஞ்சுக்காரர் களையும் அடக்குவதேயாகும்.

### c) அரசுத்துரோகச் சட்டம் : Sedition Act

இதன்படி தேசியச்சட்டங்கள் அமுல்படுத்தப்படுவதைத்

தடுக்கும் சட்ட விரோதக் கும்பல்களைத் தண்டிக்க அதிகாரம் வழங்கப் பட்டது. அத்துடன் குடியரசுத்தலைவரையும், அரசையும் பேச்சு அல்லது எழுத்தின் மூலம் தாக்கும் யாருக்கும் தண்டனை அல்லது அபராதம் விதிக்க இச்சட்டம் வகை செய்தது.

## 6. வெர்ஜீனியா, கென்டக்கி தீர்மானங்கள் :

மேற்கண்ட சட்டங்களின் விளைவாக வெளிநாட்டவர் அமெரிக்காவில் வந்து குடியேறும் நிலை அகன்றது. வெளிநாட்டவர் பலர் அமெரிக்காவை விட்டு வெளியேறினர். நாட்டுத்துரோகம் புரிந்த பலர் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். கூட்டாட்சி அரசைக் குறை கூறிய பல குடியரசு கட்சியைச் சேர்ந்த பத்திரிக்கை முதலாளிகள் தண்டிக்கப்பட்டனர். ஜெபர்சனும், குடியரசுக் கட்சியினரும் இச்சட்டங் களை கடுமையாக எதிர்த்தனர். அரசியலமைப்பின் முதல் திருத்தத்தின் படி மக்களுக்கு வழங்கப்பட்ட பேச்சுரிமை மற்றும் எழுத்துரிமையை கட்டுப் படுத்தும் எந்த சட்டத்தையும் காங்கிரஸ் இயற்ற உரிமை இல்லை என்று கண்டித்தார்.

எனவே குடியாட்சிக் கட்சியினர் செல்வாக்குப் பெற்றிருந்த வர்ஜினியா, கென்டக்கி சட்டமன்றங்கள் இச்சட்டங் களுக்கு எதிராக தீர்மானங்கள் இயற்றின. வர்ஜினியாவில் ஜேம்ஸ் மாடிசனும், கென்டக்கியில் ஜெபர்சனும் இந்த தீர்மானங்கள் இயற்றப்படக் காரணமானவர்கள் ஆவர். இந்த தீர்மானங்களின்படி காங்கிரஸ் இயற்றும் சட்டங்கள் அரசியல் அமைப்புக்கு விரோதமாக உள்ளது என்று ஒரு மாநிலம் கருதினால் அதனை தனது மாநிலத்தில் அமுல்படுத்த மறுக்கும் உரிமை உண்டு என்று வலியுறுத்தப்பட்டது. இதற்கு ‘செல்லுபடி யற்றதாக்கும் கோட்பாடு’ (Doctrine of Nullification) என்று பெயர். ஆனால் மற்ற மாநிலங்கள் இப்படிப்பட்ட தீர்மானங்களை இயற்றவில்லை.

## 7. 1800–ம் வருட தேர்தலில் ஜான் ஆடம்ஸின் தோல்வி

குடியரசுத் தலைவருக்கான தேர்தல் 1800-ல் நடைபெற்றது. கூட்டாட்சிக்கட்சியினர் சார்பில் ஜான்ஆடம்ஸ், சார்லஸ் பின்க்னே ஆகியோர் முறையே குடியரசுத்தலைவர், துணைத் தலைவராக போட்டியிட்டனர். குடியரசுக்கட்சியினர் சார்பில் ஜெபர்சனும், ஆரன்பர் என்பவரும் போட்டியிட்டனர். பன்னிரெண்டு ஆண்டுகால கூட்டாட்சிக் கட்சியின் ஆட்சியால் பலர் வெறுப்படைந்திருந்தனர். ஹாமில்டனின் நிதிக்கொள்கை, ஜே ஒப்பந்தம், ஆடம்சின் அடக்கு முறைச்சட்டங்கள் ஆகியவற்றால் பலர் கூட்டாட்சி அரசை வெறுத்தனர். இவ்வளவு

போதாது என்று கூட்டாட்சி கட்சியினரிடையே பிளவு காணப்பட்டது. ஹாமில்டனின் பதவி ஆசையும் சதிகளும் கூட்டாட்சி கட்சியை வலுவிழக்கச் செய்தன.

ஆனால் குடியரசுக் கட்சியினர் மாநிலங்களின் உரிமைகளையும், மக்களின் உரிமைகளையும் பெற்றுத் தருவதாக வாக்களித்தனர். ஆடம்சை ஒரு கொடுங்கோலராகச் சித்தரித்தனர். தேர்தல் முடிவில் ஆடம்ஸ் 45 வாக்குகளும், ஜெபர்சனும், ஆரன்பர் ஆகியோர் தலா 75 வாக்குகளும் பெற்றனர். சிக்கல் ஏற்பட்டதால் அரசியலமைப்பின் விதிகளின் படி பிரதிநிதிகள் சபையில் மறுபடியும் தேர்தல் நடைபெற்றது. கூட்டாட்சிக் கட்சியினர் பெரும்பான்மையாக இருந்த அந்த சபையில், ஹாமில்டன், ஆதரவளித்ததின் காரணமாக 1801 - பிப்ரவரி 17-ல் ஜெபர்சன் குடியரசுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆரன்பர் துணைக் குடியரசுத் தலைவரானார். குடியரசுத் தலைவரும், துணைத்தலைவரும் சேர்ந்தே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதால்தான் இப்பிரச்சனை ஏற்பட்டது. இதனைத் தீர்ப்பதற்காக 1804, செப்டம்பர் மாதம் பன்னிரெண்டாவது அரசியலமைப்பு திருத்தம் செய்யப்பட்டது. அதன்படி குடியரசுத் தலைவரும், துணைக்குடியரசுத்தலைவரும் இரண்டு வாக்குச் சீட்டுகள் மூலம் தனித்தனியே தேர்ந்தெடுக்கப்பட வழி செய்யப்பட்டது.

## 8. ஆடம்சின் நள்ளிரவு நியமனங்கள்

1800-டிசம்பரில் நடைபெற்ற தேர்தலில் ஆடம்ஸ் தோற்றுவிட்டாலும் அவரது பதவிக்காலம் 1801-மார்ச் வரை நீடித்தது. எனவே பதவியிலிருந்து விலகும் தருவாயில் நீதித் துறையில் தங்களது அதிகாரத்தை நிலைநாட்ட விரும்பினர் கூட்டாட்சி கட்சியினர். 1801, பிப்ரவரி 27-ல் நீதித்துறைச் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. அதன்படி 'மேல் முறையீட்டுக்கான சர்கியுட் நீதிமன்றங்கள்' (Circuit Court of Appeal) என்ற புதிய நீதி நிர்வாக அமைப்பை ஏற்படுத்தினர். புதிதாக பத்து மாநில நீதிபதி பதவிகள் உருவாக்கப்பட்டன. சட்டபூர்வமான வழக்கறிஞர்கள், குமாஸ்தாக்கள் ஆகியோரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. இப்படி உருவாக்கப்பட்ட புதிய பதவிகளில் ஜான் ஆடம்ஸ் கூட்டாட்சி கட்சியினரையே நியமித்தார். தலைமை நீதிபதியாக ஜெபர்சனின் அரசியல் விரோதியும், தீவிர கூட்டாட்சி ஆதரவாளருமான ஜான் மார்ஷல் நியமிக்கப்பட்டார். தனது பதவிக்காலத்தின் இறுதி நாளான 1801, மார்ச் நள்ளிரவு வரை நீதிபதிகளின் நியமனப் பத்திரங்களில் . கையெழுத்திட்டார், ஜான் ஆடம்ஸ்.

இக்காரணத்தினால் தான் இந்த நியமனங்கள் நள்ளிரவு நியமனங்கள் என்றும், நீதிபதிகள், நள்ளிரவு நீதிபதிகள் (Mid Night Judges) என்றும் அழைக்கப்பட்டனர்.

## ஆடம்ஸைப் பற்றிய மதிப்பீடு

ஜார்ஜ் வாஷிங்டனுக்குப் பிறகு பதவியேற்ற ஜான் ஆடம்ஸ் சிறப்பானபெயர்பெறவில்லைஎன்றாலும், வாஷிங்டன் உருவாக்கி வைத்த கொள்கைகளை பிரளாது உறுதியுடன் பின்பற்றினார். மக்களிடம் செல்வாக்குப் பெற்ற ஹாமில்டனும், ஜெபர்சனும் இவரது அரசியல் எதிரிகளாகி விட்டதால் இவரால் சுதந்திர மாகவும், சிறப்பாகவும் செயல்பட முடிய வில்லை. மேலும் ஆடம்சின் அமைச்சர்கள் எல்லோரும் ஹாமில்டனிடம் மட்டுமே விசுவாசமாக நடந்து, அவரையே தங்கள் தலைவராகக் கருதினர். இதனால் மொத்தத்தில் இவரது காலத்தில் கூட்டாட்சிகட்சி வலிமை இழந்தது. பிரெஞ்சுப் புரட்சியின் விளைவாக அமெரிக் காவில் ஏற்பட்ட உள்நாட்டுப் பிரச்சனைகளை உறுதியுடன் சமாளித்தார். ஆனால் இவர் இயற்றிய அடக்குமுறைச் சட்டங் களால் மக்களிடம் மதிப்பிழந்தார். அதுவே தேர்தலில் இவரது தோல்விக்கும் காரணமாக அமைந்தது.